பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 15 செவ்வாய்க்கிழமை (31-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:280

# படை உளவாளிகள் கொலைகளால் பாதுகாப்பு வட்டாரங்களில் அதிர்ச்சி!

## புலனாய்வு நடவழிக்கைகளில் பெரும் பாதிப்பு; பின்னடைவு

கொழும்பு,ஓகஸ்ட்31

**இராணுவப் புலனாய்வாளர்கள் மற்றும் படைத்தரப்புக்கு உளவுபார்ப்போர் அடுத்தடுத்துப் படுகொலை செய்யப்பட்டு வருவது அரச பாதுகாப்பு வட்டாரங்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவருகின்றது.**

**இந்தப் படுகொலைகளால் அரசுப் படைத்தரப்பின் புலனாய்வு மற்றும் உளவு நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்தபின்னர் இதுவரை இருபதுக்கும் அதிகமான உளவாளிகள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் தமிழர்களே.

விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவி அவர்கள் பற்றிய தகவல்களை அரச புலனாய்வுப் பிரிவுக்கு வழங்குவது, தலைநகரில் புலிகளின் செயற்பாடுகளை வேவுபார்ப்பது, புலிகளின் பிரதேசத்துக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தோரே பெரும்பாலும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இராணுவப் புலனாய்வுப்பிரிவினருடன் மிக நெருக்கமாகச் செயற்பட்ட பல உளவாளிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன.

கொழும்பு, அத்துருகிரிய, மிலேனியம் சிட்டியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் மறைவிடம் ஒன்று 2002ஆம் ஆண்டு பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தினால் அந்த மறைவிடத்துடன் இணைந்து செயற்பட்ட உளவாளிகள் பலரின் விவரம் வெளியே தெரியவந்தது. அவர்களில் பெரும்பாலானோர் - அநேகமாக அனைவரும் - பின்னர் வெளியில் வைத்து ஒவ்வொருவராக வரிசையாகத் தீர்த்துக்கட்டப்பட்டனர்.

அதன் பின்னரும் உளவாளிகள் படுகொலை தொடர்கதையானது.

தங்களது உளவாளிகளாகச் செயற்படுகின்றவர்கள் பலர் குறித்து வெளியில் தகவல்

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்று நல்லூர் ஆலய 10ஆம் திருவிழாவின்போது மஞ்சத்தில் வள்ளி, தெய்வானை சமேதராக உலாவரும் முத்துக்குமாரசுவாமி.
*(படம்: தீபன்)*

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் கடத்தல்

ஈ.பி.டி.பி. இயக்க உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத ஆயுதக் குழுவினரால் செங்கலடிப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கடத்திச் செல்லப்பட்டார் என இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

செங்கலடி உமா அரிசி ஆலை வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் கடமையாற்றி வந்த இவர் தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கும் சமயத்தில் ஆயுதங்களுடன் வந்த நான்குபேர் இவரைக் கடத்திச்சென்றனர் என

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் நியாயத்தை வெளிப்படுத்த கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரசாரம்

## இரா.சம்பந்தன் அறிவிப்பு

கிளிநொச்சி,ஓக.31

தமிழர்களின் தரப்பில் நியாயத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தெளிவுபடுத்தும் விதத்திலும் எழுச்சியை ஏற்படுத்தும் விதத்திலும பல வேலைத்திட்டங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் முன்னெடுப்பர். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் .

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேசினர். அதன் பின்னர் செய்தியாளர்களுக்குத் தகவல் வெளியிட்டபோதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள புலிகளின் அபிவிருத்திக்கான திட்டமிடல் செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான விநோதராதலிங்கம் தவிர ஏனைய அனைத்து எம்பிக்களும் இக் கூட்டத்தில்

(16ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்ச்செல்வனுடன் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு...



# தமிழரின் நியாயத்தைப் பிரசாரப்படுத்த தமிழ்.எம்.பிக்கள் 4 குழுக்கள் அமைப்பு

## கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வன் தகவல்

கிளிநொச்சி,ஓக.31

நாட்டுக்குள்ளும் சர்வதேச ரீதியிலும் ஈழத் தமிழர்களின் நியாயமான நிலைப்பாட்டை எடுத்துரைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தங்களுக்குள் நான்கு உப குழுக்களை அமைத்துள்ளனர்.

இத்தகவலை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களைச் சந்தித்துப் பேசிய பின்னர், செய்தியாளர்களுக்குத் தகவல் வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செய்தியாளர்களுக்கு அப்போது அவர் வழங்கிய செவ்வியின் விவரம் வருமாறு:-

(16ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுத் தலைவர் இன்று மட்டுநகர் விஜயம்

மட்டக்களப்பு,ஓக.31

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் படுகொலைகளைத் தடுப்பது தொடர்பாக ஆராய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புருவ் ஹொவ்டே இன்று அங்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

படைத் தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிச் சந்திப்பை மீண்டும் ஏற்படுத்தும் சாத்தியம் குறித்தும் அவர் ஆராயவிருக்கின்றார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை நெருக்கடிக்கு உள்ளாவது தொடர்பாகவும் -

படுகொலைகளைத் தடுக்கும் சாத்தியப்பாடு தொடர்பாகவும் -

அவர் படைத்தரப்புடனும் விடுதலைப் புலிகளுடனும் தனித்தனியே பேச்சு நடத்தவிருகின்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# கனடா வாகன விபத்தில் இரு தமிழ் இளைஞர்கள் பலி!

கனடாவின் ரொறன்ரோ நகரில் கடந்த சனிக்கிழமை பின்னிரவு இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இரண்டு தமிழ் இளைஞர்கள் பலியாகியுள்ளனர்.

சனிக்கிழமை பின்னிரவு 11.45 மணியளவில் ரொறன்ரோவில் தமிழர்கள் வாழும் ஸ்காபுரோ பகுதியில் இந்த வீதி விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனச் சாரதியான நகுலேஸ்வரன் கந்தசாமி (வயது-24) மற்றும் பயணியான பொன்னுத்துரை நேசகுமார் (வயது-25) ஆகியோர் விபத்து நடந்த இடத்திலேயே பலியாகியுள்ளனர் என்று பொலீஸ் தகவல்கள் தெரிவித்தன.

மழை பெய்துகொண்டிருந்தபோது இவர்கள

(16ஆம் பக்கம் பார்க்க)

# நடிகர் 'சிலோன்' விஜேந்திரன் காலமானார்

சென்னை,ஓக.31

பொல்லாதவன், புன்னகை மன்னன் உட்பட பல தமிழ்த் திரைப்படங்களில் நடித்தவரான 'சிலோன்' விஜேந்திரன் நேற்று அதிகாலை சென்னையில் காலமானார்.

கடந்த 26ஆம் திகதி திருவல்லிக்கேணியில் [illegible] விடுதிக் கட்டடத்தில் இடம்பெற்ற தீவிபத்தில் சிக்கி படுகாயமடைந்தார். இதனையடுத்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட சிலோன் விஜேந்திரன் சிகிச்சை பயனின்றி காலமானார்.

இவர் தீவிபத்தில் உடனடியாக உயிரிழந்தார் என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பான கருத்தரங்கில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஆர்.பி.சந்திரசேகரா, யாழ். மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் உட்பட கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் சத்திரசிகிச்சை நிபுணர் தயாளன் அம்பலவாணர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## தமிழீழ வைப்பகத்தின் ஊரகக்கிளை

முல்லைத்தீவு,ஓக.31

தமிழீழ வைப்பகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 10 ஆவது கிளையாக முல்லைத்தீவு மாவட்ட ஊரகக்கிளை நாளை புதனகிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. 9 ஆவது ஊரகக்கிளை பரந்தனில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(10)

## நினைவுநாள் நிகழ்வும் வீரமுரசு நிகழ்வும்

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் ராஜுவினது இரண்டாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகளும் உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் "வீரமுரசு" சிறப்பு நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை வலி.தெற்கில் நடைபெறவுள்ளது.

ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் இன்றிரவு நடைபெறவுள்ள இச்சிறப்பு நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சமகாலக் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். இந்நிகழ்வுகளில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அனைத்து மக்களுக்கும் உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (10-150)

# போர் ஓய்ந்துவிட்ட இன்றைய நிலையில் பலிகொள்ளும் ஆயுதமாக மோ.சைக்கிள்

## கவலைக்குரிய விடயம் இது என்கிறார் மருத்துவ நிபுணர்

யாழ்ப்பாணம்,ஓக.31

குடாநாட்டில் போர் ஓய்ந்துவிட்ட சூழ்நிலையில், உயிரிழப்பை ஏற்படுத்தும் ஆயுதங்களாக மோட்டார் சைக்கிள்கள் மாறிவருகின்றமை கவலைக்குரியவிடயமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் சத்திர சிகிச்சை நிபுணர் தயாளன் அம்பலவாணர்.

நேற்றுப் பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் "எங்கள் வீதியில் மரணம் - வீதிப் போக்குவரத்து விபத்துக்களும் நாங்களும்" எனும் தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கு மற்றும் விவரணக் காட்சிப்படுத்தலில் கலந்து கொண்டு விளக்கவுரை நிகழ்த்தியபோதே சத்திரசிகிச்சை நிபுணர் இதனைத் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள் சாரதிகள், சைக்கிளில் செல்வோர், பாதசாரிகள் ஆகியோர் மத்தியில் நிலவும் போக்குவரத்து ஒழுங்குகள் பற்றிய விழிப்புணர்வு இன்மை யாழ். மாவட்டத்தில் வீதிவிபத்துக்கள் அதிகரிப்பதற்கான காரணங்களுள் பிரதானமானது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மரணத்தை விளைவிக்கின்ற காரணிகளில் வீதிவிபத்துக்கள் இன்று பத்தாவது இடத்தில் உள்ளன. 2020ஆம் ஆண்டில் உலகரீதியாக மரணங்களை விளைவிக்கப்போகும் காரணிகளில் இரண்டாவது இடத்தை வீதிவிபத்துக்கள் பெற்றுவிடும் என்பது உலக சுகாதார நிறுவனத்தின் கருத்தாகும்.

ஆசியாவில் வீதிப்போக்குவரத்து விபத்துக்களுக்கான பிரதான காரணங்களாக ஆபத்துக்களை உருவாக்கும் விதத்தில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் அளவுக்கு அதிகமாகப் பெருகிவிட்ட வாகனங்கள், ஊழல் மயப்பட்ட பொலீஸ் நிர்வாகத்தினரின் செயற்பாடுகள் ஆகியன அமைகின்றன.

இலங்கையில் வருடமொன்றுக்கு வீதிப் போக்குவரத்து விபத்துக்களில் பாதிக்கப்படுவோரும் பலியாவோரும் இரண்டாயிரம் பேர் என்று கணிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக இலங்கையின் தலைநகரான கொழும்பு அடங்குகின்ற மேல்மாகாணத்துக்கு ஈடாக யாழ். பிராந்தியத்திலும் வீதி விபத்துக்களின் வீதம் அதிகரித்து வருகின்றன. 1982ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் சனத்தொகை அதிகமிருந்த போதும் 141 சம்பவங்களே இடம்பெற்றன. ஆனால், 2004ஆம் ஆண்டில் குறைந்தளவு சனத்தொகையினரே யாழ். மாவட்டத்தில் வாழ்கின்றபோதும் 316 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தில் மாதந்தோறும் 3பேர் முதல் 5பேர் வரை உயிரிழக்கின்றனர். நிகழும் மொத்த விபத்துக்களில் 60 சதவீதமான விபத்துக்களில் வாகனச் சாரதிகளும் விபத்தில் காயப்படுகின்றனர் அல்லது இறக்கின்றனர்.

போர்நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டு ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட போக்குவரத்துச்சேவை அதிகரிப்பு, வாகன அதிகரிப்பு என்பவற்றுக்கு ஏற்ப வீதிப்போக்குவரத்து விழிப்புணர்வு அதிகரிக்கப்படல், சாரதிகளுக்கான விதிகளையும் சட்டம் ஒழுங்கையும் அமுலாக்கல், வீதிகளை அகலப்படுத்திப் புனரமைத்தல், வேகத்தணிப்பு ஒழுங்குகள், வீதிப்போக்குவரத்து அடையாளங்கள், அறிவித்தல்... நிறுவுதல் என்பன தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும்.

- இவ்வாறு மருத்துவ நிபுணர் தயாளன் அம்பலவாணர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி, நிர்வாக ரீதியான பற்றாக்குறைகள், கஷ்டங்களை புள்ளிவிவரங்களுடன் சுட்டிக் காட்டித் தனது உரைய நிகழ்த்தினார். வட பிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்களை உரிய தராதரத்துடன் பொறியியல் ரீதியாக பேணுவதற்கே யாழ்ப்பாணத்தில் கோண்டாவில், காரை நகர், பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள வேலைத்தலங்களால் மட்டுப்பாடுகள் காரணமாக முடியாதுள்ளது என்றும் மல்லாகத்திலுள்ள வேலைத்தலம் இயங்குவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வீதிப்போக்குவரத்து விழிப்புணர்வை ஏ... படுத்தும் விவரணங்கள், அறிவூட்டல்கள் அ... கிய இறுவெட்டுகளும் அங்கு வெளியிடப்ப...

## இடம் மாற்றம்

தென்மராட்சி,ஓக.31

சாவகச்சேரி, சங்கத்தானையில் இயங்கி வந்த தென்மராட்சிக் கல்வி வலய அலுவலகம் நேற்று முதல் சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள கட்டடத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.(ஒ-117)

## பல்கலை ஊழியர் கூட்டுக்குழு நாளைமுதல் வேலை நிறுத்தம்

கொழும்பு,ஓக.31

அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற்சங்கக் கூட்டுக்குழு நாளை முதலாம் திகதி தொடக்கம் தொடர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை களனி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டுக்குழுவின் நிர்வாகசபைக கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அபிவிருத்தி நிறுவனத்தின் சம்பள அறிக்கையை உடன் நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியே இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த வேலைநிறுத்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதிக் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகியோருக்கு கூட்டுக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளது.

தொழிற்சங்கக் கூட்டுக்குழு மேற்கொள்ளவுள்ள வேலைநிறுத்தத்தின் காரணமாகப் பல்கலைக்கழகங்களின் கல்விச் செயற்பாடுகள் தடைப்படுவதுடன், நடைபெறவுள்ள ஆண்டிறுதிப் பரீட்சைகளை நடத்துவதற்கும் தடை ஏற்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் தலைவர் பேராசிரியர் பி.ஆர்.என்.என்.மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைநிறுத்தத்தால் இலங்கையில் உள்ள 12 பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளும் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும் என்றும் -

இதனால், அவற்றை மூட வேண்டியநிலை ஏற்படக்கூடும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## காதருக்குப் பிணையா? நாளை தீர்ப்பு

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அப்துல்காதர் எம்.பியை பிணையில் விடுவது தொடர்பாக கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் நாளை தீர்ப்பு வழங்கும்.

கொழும்பு பிரதம நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் நேற்று அப்துல் காதர் எம்பி. ஆஜர் செய்யப்பட்டார். அப்போது அவரைப் பிணையில் விடுவிக்கக் கோரி அவரது சட்டத்தரணிகள் வாதாடினர்.

அப்துல்காதர் எம்பியை நாளைவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான், பிணைக்கோரிக்கை மீதான தீர்ப்பை நாளை தாம் வெளியிடுவார் என அறிவித்தார். சிறை வைத்தியசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அப்துல் காதர் எம்.பியை மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவும் நேரில் சென்று பார்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் திங்கட்கிழமை, ஓகஸ்ட்-30-2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,375.17 | 1,383.96 | (8.79) | (0.64) |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,059.88 | 2,077.78 | (17.90) | (0.86) |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,422.33 | 1,431.43 | (9.10) | (0.64) |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,138.93 | 2,157.52 | (18.59) | (0.86) |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 47.80 | 261.30 | - | - |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 3.40 | 20.80 | - | - |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 1,449.00 | 1,784.00 | - | - |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 336.80 | 339.00 | - | - |

கம்பனி உரிமைப் பங்கு வழங்கல் தொடர்பான அறிவித்தல்கள்

| கம்பனி பெயர் | விகிதம் | XR திகதி | உரிமம் கைமாறற் திகதி |
|---|---|---|---|
| செமனக்ஸ (வழங்கல் விலை ரூ.50) | 5 இற்கு 1 | 02.09.2004 | 0[illegible].10.2004 |
| ஹொடேல் சீகிரிய (வழங்கல் விலை ரூ.30) | 2 இற்கு 1 | 13.09.2004 | 14.10.2004 |

குறிப்பு: குறித்த திகதியில் பங்கிலாப அறிவித்தல்கள் மற்றும் போனஸ் வழங்கல்கள் இடம்பெறவில்லை.

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தலவரலாறு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.31

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரதநாராயணர் ஆலயத்தின் தலவரலாறு நூல் நாளை மறுதினம் வியாழக்கிழமை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. தல வரலாறு நூலை அருட்கவி சீ.விநாசித்தம்பி எழுதியுள்ளார்.

நூல் வெளியீட்டு விழா அன்றைய தினம் முற்பகல் பதினொரு மணிக்கு ஆலயத்தில் நடைபெறும். அருணோதயக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் எம்.பத்மநாதன் நூலை வெளியிட்டுவைப்பார். (அ)

## துணைவேந்தரை அடைத்து வைத்ததை வன்மையாகக் கண்டிக்கின்றது ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி ஒருவரின் பிரச்சினை தொடர்பாக அவரது உறவினர்கள் எனக் கூறப்படும் சிலர் துணைவேந்தரை அவரது அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் பூட்டியமையை பல்கலைக்கழக நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ஒன்றியம் வன்மையாகக கண்டிக்கின்றது என்று சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தரையோ வேறு எந்த அதிகாரிகளையோ அல்லது வேறு எவரையுமோ இவ்வாறு அடைத்து வைப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பதுடன் அடிப்படை மனித உரிமை மீறலுமாகும்.

இவ்வாறான செயலை மேற்கொண்டவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படல் வேண்டும் என்பதை எமது ஒன்றியம் வலியுறுத்துகிறது என்று உள்ளது. (10)

## வில்பத்துக் காட்டில் விடுதலைப் புலிகள் புதிய முகாம் அமைக்கின்றார்களாம்!

கொழும்பு,ஓக.31

வில்பத்துக் காட்டுப் பகுதியில் புலிகள் புதிதாக இரண்டு முகாம்களை அமைத்துள்ளனர் எனப் பொலீஸ் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளம் - மன்னார் பிரதேச எல்லைகளைக் கொண்ட இடங்களில் இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாம்களுக்கு மன்னார் கடற்பகுதியில் அமைந்திருக்கும் குதிரைமலை முகாம்களுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் எனவும் பொலீஸார் சந்தேகிக்கின்றனராம்.

வில்பத்துப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய முகாம்களில் பெண் போராளிகள் பெருமளவில் பயிற்சி பெறுகிறார்கள் எனவும் பொலீஸார் தெரிவிக்கின்றனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# திறமையற்ற அரசு திண்டாடுகிறது

'ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை என்றானாம்' - என்று ஒருபேச்சு வழக்கு உள்ளது.

அடுத்த ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்கமுடியாமல் தடுமாறும் இலங்கைத் தீவின் நிதியமைச்சர், அதற்குக் கூறும் காரணங்களைப் பார்க்கும்போது இந்தப் பேச்சு வழக்கு மொழிதான் நினைவுக்கு வருகின்றது.

"நாடு மிக மோசமான நிலையை எதிர்கொள்கின்றது. உலக சந்தையில் எரிபொருளின் விலை உயரும், கடும் வரட்சியும் இரட்டைக் குத்துகளாக வந்து இறங்கியுள்ளன. இதனால், அரச வங்கிகளையும், அரச நிறுவனங்களையும் கையாள்வதில் அரசு கடுமையான - அதேநேரம் பலருக்கும் அதிருப்தி தருகின்ற - நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" - என்று கூறுகின்றார் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம.

பொதுத் தேர்தல் சமயத்தில் தொழில் வாய்ப்புத் தருவோம், சம்பள அதிகரிப்பு வழங்குவோம், அத்தியாவசிய மற்றும் விவசாயப் பொருள்களுக்கு அதிகளவு மானிய உதவி என்றெல்லாம் பெரிதாகப் பீற்றிக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, இப்போது ஆட்சிக் கட்டில் ஏறியதும், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் மட்டுமல்ல, இருந்த பொருளாதார வள நிலையைத் தக்கவைக்கவும் முடியாமல் தடுமாறுகின்றது.

ஒருபுறம் எண்ணெய் விலை அதிகரிப்பு. இதனால், எரிபொருளுக்கான மானியம் கழுத்தைத் திருகுகின்றது. மாவுக்கு மானியம் கேட்டுப் பிரிமா மா ஆலை தொல்லை கொடுகின்றது.

தேர்தல் வாக்குறுதியைச் சமாளிப்பதற்காக உரத்தின் விலையை அவசரப்பட்டுக் குறைத்ததால் வழங்க வேண்டிய மானியம் உயிரைப் பிடுங்குவதாக உள்ளது.

முப்பதாயிரம் பட்டதாரிகளுக்கும், ஜி.சீ.ஈ.உயர் தரம், சாதாரணதரம் கற்றவர்கள் மற்றும் ஏனையோருக்குமாக அறுபதாயிரம் பேருக்கு உடன்வேலை வாய்ப்பு என்ற அரசின் 'வாய்ச்சவடால்' பேச்சை நடைமுறைப்படுத்துவதற்கு வருடாந்தம் மேலும் அறுநூறு கோடி ரூபா தேவை.

இதற்கிடையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு தேர்தல் காலத்தில் கொடுத்த 75 வீத சம்பள உயர்வு வாக்குறுதியை நிறைவேற்றுவதானால் வருடாந்தம் மேலும் 9 ஆயிரம் கோடி நிதி தேவைப்படும்.

ஆனால், சம்பள உயர்வு சிந்திக்கப்படவே முடியாத விவகாரம். அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு என்ற நினைப்புக்கே இடம் கொடுக்காதீர்கள் என்று திறைசேரிச் செயலாளர் உண்மை நிலையைக் கோடி காட்டியுள்ளார்.

இந்தச் சூழலில் அரசாங்கத்தின் வருவாயும் மோசமாக வீழ்ச்சி கண்டு வருகின்றது.

விலைவாசி ஏற்றம் 'பிரேக்' அடிக்காமல் பாய்ந்து செல்கின்றது. அடுத்துவரும் வாரங்களில் நிலைமை மோசமாகும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அதிகார சபைகளுக்கு சம்பளம் கொடுப்பதற்குக் கூட நிதி இல்லை. கஜானா காலி; திறைசேரி விழி பிதுங்குகின்றது என்றெல்லாம் செய்திகள் வெளியாகின்றன.

இந்தச் சூழ்நிலையில் அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியோ தான் தயாரித்து வைத்திருக்கும் சில அபிவிருத்தித் திட்டங்களை அரசிடம் சமர்ப்பித்து, அவற்றை அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டு அவற்றுக்கு நிதி வழங்கும்படி வற்புறுத்தப் போகின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் அன்றாட நடவடிக்கைகளைச் சமாளிக்கவே நிதியின்றிக் கஷ்டப்படும் அரசு, அவற்றை எதிர்கொள்வதற்காக சர்வதேச ரீதியில் 'தண்டி' வருவதற்குப் பெரும் சிரத்தை எடுத்துள்ளது. இப்படி அது திரட்டும் நிதியை, அன்றாட - அவசர - நடைமுறைத் தேவைகளுக்குப் பயன்படுத்தவிடாமல், அபிவிருத்தித் திட்டங்கள் என்று தான் குறிப்பிடும் நடவடிக்கைகளுக்குப் பிடுங்குவதற்கு ஜே.வி.பி.முயல்வது "பிச்சை எடுத்ததாம் பெருமாள்; பிடுங்கித் திண்டதாம் அனுமான்" - என்ற கதையாகத்தான் அமையும்.

இத்தகைய நெருக்கடியில் அரசும், நாடும் சிக்கி அல்லற்படுவதைப் பார்த்து பரிதவிப்பதைத் தவிர எமக்கு வேறுவழியேயில்லை.

முன்னாள் பிரதமரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கூறுவது போன்று -

"புராதன மன்னர் காலத்திலிருந்தே பல மோசமான வரட்சிகளை, இயற்கை அழிவுகளை எல்லாம் இந்த நாடு சந்தித்து வந்திருக்கின்றது. அப்போதெல்லாம் நாட்டை வழிநடத்தியோர் அர்த்த சாஸ்திரங்களில் கூறியபடி நாட்டை ஆண்டு மக்களுக்குத் தொல்லையேற்படாமல் காப்பாற்றினர். ஆனால், வக்கற்ற - இந்த - ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசோ - தன்னுடைய திறமையின்மை காரணமாக இவ்விடயங்களையும் சிக்கல்களையும் மக்கள்மீது சுமத்தி வேடிக்கை பார்க்கின்றது."

ரணில் சுமத்தும் குற்றச்சாட்டில் முழு நியாயம் இருக்கின்றது என்பது தப்பல்ல.

# வைத்தீஸ்வரன் ஆலய பரிவாரக் கோயில்களில் வியாழனன்று காலை மஹாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ். வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் சுவாமி ஆலயத்தின் (வண்ணை வைத்தீஸ்வரன்) பரிவாரத் திருக்கோயில்களான வேம்படிப் பிள்ளையார் கோயில், காளி கோயில், முத்துமாரியம்மன் கோயில் ஆகியவற்றின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 7.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனையொட்டிய பூர்வாங்கக் கிரியைகள் நேற்று அதிகாலை 6 மணியளவில் ஆரம்பமாகின.

நேற்றையதினம் காலை விநாயகர் வழிபாடு, ஆலயத்திற்கான திரவியசுத்தி, திரவிய விபாகம், கணபதி ஹோமம் ஆகியன இடம்பெற்றன.

தொடர்ந்து மாலை 5 மணி முதல் பிராமசாந்தி, பிரவேசபலி, ரட்சோக்ன ஹோமம், திசாஹோமம் ஆகியன நடைபெற்றன.

தொடர்ந்து எதிர்வரும் 2ஆம் திகதி வரை ஏனைய கிரியைகள் இடம்பெறும்.

எதிர்வரும் 3ஆம் திகதி காலை 6 மணிக்கு மஹாபூர்ணாகுதி, யாகதீபாராதனை, யாத்ராதானம், கும்பவீதிப் பிரதட்சணம் என்பன இடம்பெற்று 7.15 மணிககு ஸ்தூபிகள் கும்பாபிஷேகமும் 9 மணிக்கு மஹா கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு திருவீதியுலா இடம்பெறும்.

வேம்படிப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தினை சிவபூஸா துரந்தரர் சிவஸ்ரீ மு.விஜயகாந்தக் குருக்களும் - காளிகோயில் கும்பாபிஷேகத்தினை சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்களும் - முத்துமாரியம்மன் ஆலயக் கும்பாபிஷேகத்தினை சிவஸ்ரீ பி.கிருபாஹரக் குருக்களும் பிரதம குருவாக இருந்து நிறைவேற்றி வைப்பர்.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த இந்துக் குருமார்கள் பலரும் இந்தக் கும்பாபிஷேகக் கிரியைகளில் பங்கு கொள்வர். ஆசியுரையை சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள் நிகழ்த்துவார்.

தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலய பரிவாரத் திருக்கோயில்களில் ஒன்றான பூரணை புட்கலை சமேத அரிஹரபுத்திர ஐயனார் ஆலயத்துக்கான கும்பாபிஷேகம் பின்னர் நடைபெறும். மற்றைய கோயிலான கற்கட்டு பைரவர் ஆலயத்துக்கு அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் அந்தரிதம் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகம் நடைபெறும் பரிவாரக் கோயில்களில் எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8மணி முதல் அடியார்கள் எண்ணெக்காப்பு சாத்துதல் ஆரம்பமாகி அன்றைய தினம் மாலை 3மணியுடன் நிறைவுபெறும். (எ-4-6)

# புலிகளுடனான பேச்சில் தீவிரப்போக்கு காட்டமாட்டோம் - மகாநாயக்கர் தகவல்

கொழும்பு,ஓக.31

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடைபெறும்போது தாம் தீவிரவாத நிலைப்பாடொன்றைக் கடைப்பிடிக்கப் போவதில்லையென்று மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் அதி.வண.திப்பொட்டுவாவே சித்தார்த்த சிறி சுமங்களதேரர் கூறினார்.

புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தும் போது எவ்வாறான அடிப்படையில் அதனை மேற்கொள்வீர்கள் என்று கேட்டபோதே மகாநாயக்கர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'நான் ஒரு சமய தீவிரவாதியுமல்ல இனவாதியுமல்ல. என் செயற்பாடுகள் அனைத்தும் 'புத்த தர்மத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளனவென்று' அவர் மேலும் கூறியுள்ளார்.

புலிகளைச் சந்திப்பதற்கு முன்னர் மல்வத்த சங்க சபாவுடன் பேச்சுக்களின் அடிப்படை பற்றி கலந்துரையாடவிருப்பதாகவும் மகாநாயக்கர் தெரிவித்தார்.

மிகவும் சிக்கலான பிரச்சினைகள் ஆராயப்படும்போது தீவிர நிலைப்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும் என்று கூறியுள்ள மகாநாயக்கர் ஜே.வி.பியும் விடுதலைப் புலிகளும் தமது தீவிர நிலைப்பாடுகளைக் கைவிடவேண்டும் என்றும்- செயலிலும், சிந்தனையிலும் இருதரப்பும் சகிப்புத் தன்மையை மேற்கொள்ள வேண்டும் என்றும் - சொன்னார்.

தமது சொந்த அபிப்பிராயத்தின்படி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிய விடயம் ஒருபுறமிருக்க புலிகள் தேர்தலை எதிர்நோக்குவதிலும் ஆயுதங்களைக் கீழேபோடுவது முக்கியமாகும் என்றும் அவர் கூறினார்.

ஆயுதம் தரித்த குழுக்கள் பல நாடுகளில் ஜனநாயக அடிப்படையில் தேர்தல்களில் போட்டியிட்டிருக்கின்றன என்றும் மகாநாயக்கர் சுட்டிக்காட்டினார். (ப)

# மின் தடை குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

பராமரிப்பு வேலைகள் காரணமாக கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் குறிப்பிட்ட சில தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 4ஆம் திகதி கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களிலும் -

அடுத்தமாதம் 11ஆம் திகதி இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி ஆகிய இடங்களிலும் -

அடுத்தமாதம் 18ஆம் திகதி கந்தரோடை, மாசியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய இடங்களிலும் -

அடுத்தமாதம் 25ஆம் திகதி உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதியிலும் -

ஒகரோபர் மாதம் 2ஆம் திகதி புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசங்களிலும் -

செப்ரெம்பர் 9ஆம் திகதி சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை ஆகிய இடங்களிலும்-

செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் வேலைகள் முடிவுற்றால் அறிவிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பாகவே மின்சாரம் வழங்கப்படும் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-201)

# உரக் கூட்டுத்தாபனத்தின் பணிகள் கிளிநொச்சியில் விஸ்தரிப்பு

கிளிநொச்சி,ஓக.31

விவசாய அமைச்சின் கீழ் கிளிநொச்சியில் இயங்கி வந்த உரக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கென பரந்தன் சந்திப் பகுதியிலுள்ள கரச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கட்டடத்தில் உரக் கூட்டுத்தாபனத்தின் புதிய கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற இதன் ஆரம்பநிகழ்வில் உரக் கூட்டுத்தாபனத்தின் வடக்கு - கிழக்கு பிராந்திய முகாமையாளர் ஜி.சிதம்பரநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அலுவலகத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

கரச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் நடராஜா நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் மயூரன் மங்கள விளக்கேற்றினார். ப.நோ.கூ. சங்க பொதுமுகாமையாளர் எம்.கே.செல்வராசா விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உரக் கூட்டுத்தாபனத்தின் வடக்கு - கிழக்குப் பிராந்திய பொது முகாமையாளர் ஜி.சிதம்பரநாதன் உரையாற்றும்போது -

விவசாயிகளுக்குத் தேவையான உரம் உரிய நேரத்தில் உரிய விலையில் கிடைப்பதில்லை.

ஒவ்வொரு பிராந்தியத்திலும் உரக் கூட்டுத்தாபனத்தின் அலுவலகங்கள் செயற்பட்டு விவசாயிகளுக்கு உதவி புரிந்து வந்தன.

இப்போது கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த உரக்கூட்டுத்தாபனக் கிளையின்மூலம் விவசாயிகள் பெரிதும் நன்மையடையக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (4)

## புற்றுநோய் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.31

வடக்கு - கிழக்கு புற்றுநோய் உதவி மையத்தால் நடத்தப்படும் பெண்களுக்கான இலவச புற்றுநோய் மருத்துவ முகாம் எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3மணிவரை 69, பழம் றோட், கந்தர் மடத்தில் அமைந்துள்ள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (எ-201)

## நாளை

ஆவணி 16
புதன்கிழமை
(01.09.2004)
திதி : துதியை
காலை 6.42 வரை.
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முன்னிரவு 9.20 வரை
சுபநேரம்: 4.35 - 6.05
ராகுகாலம்: 12.05 - 1.35
(பழைய நேரப்படி)

# ஊர்காவற்றுறையில் 37 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் கிடைத்தன

சாவகச்சேரி,ஓக.31

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள குடியேற்றத் திட்டங்களில் வசித்துவரும் 37 குடும்பங்களுக்கு அண்மையில் காணி உறுதிப பத்திரங்கள் வழங்கப்பட்டன.

கரம்பன் கிழக்கு குடியேற்றத் திட்டத்தில் வசித்துவரும் 24 குடும்பங்களும் மாட்டுக்காலை குடியேற்றத் திட்டத்தில் வசித்துவரும் 13 குடும்பங்களும் இந்த உறுதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டன.

இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், காணி உத்தியோகத்தர் எஸ். சிவசுப்பிரமணியம், பிரதம எழுதுநர் எஸ். ஜெகபாலன், கிராம சேவை உத்தியோகத்தர்களான கே.சகாதேவன், எஸ்.ஜெயதரன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (எ-31)

## உதயவாக்கு

பணக்காரர்களின் மாளிகைகளை விட ஏழைகளின் குடிசைகளில்தான் இன்பம் அதிகமாயிருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 38 லட்சம் வாக்காளர்களுக்கு இன்னமும் அ.அட்டை கிடையாது

## தேர்தல் ஆணையக அறிக்கையில் தகவல்

நாட்டிலுள்ள மொத்த வாக்காளர்களுள் சுமார் 38லட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டைகள் இல்லையென்று தேர்தல் ஆணையாளர் தமது, நிர்வாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதன்படி, நாட்டின் மொத்த வாக்காளர் எணணிக்கையில் 69 வீதமானோரே அடையாள அட்டைகளைப் பெற்றுள்ளனர். கடந்த ஜனவரி மாதத்தில வெளியிடப்பட்டுள்ள தேர்தல் ஆணையாளரின் அறிக்கையின்படி வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயார்செய்யப்பட்ட வேளையில் தேசிய அடையாள அட்டைகள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பித்துள்ளோரின் எண்ணிக்கை 90 லட்சத்து 77ஆயிரத்து 430 ஆகும். தற்போது பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்த வாக்காளர்களின எண்ணிக்கை ஒரு கோடியே 28 லட்சத்து 99 ஆயிரத்து 32 ஆகும். இதற்கமைய அடையாள அட்டைகள் இல்லாத வாக்காளர்களின் எண்ணிக்கை 38 லட்சமாகும்.

மேற்படி அறிக்கைக்கு அமைய கொழும்பு மாவட்டத்திலுள்ள 83 சதவீதமானோருக்கும் கமபஹா மாவட்டத்தில் 80 வீதமானோருக்கும் அடையாள அட்டைகள் உள்ளன.

நாட்டில் உள்ள வாக்காளர்களில் அடையாள அட்டைகளைக் கொண்டுள்ள வாக்காளர்கள் குறைந்தளவில் வன்னி மாவட்டத்திலேயே உள்ளனர். அங்கு 34 சதவீதமானோருக்கே அடையாள அட்டைகள் உள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் நூற்றுக்கு 59 சதவீதமானோருக்கும் அநுராதபுர மாவட்டத்தில் 60 சதவீதமானோருக்கும் பொலன்னறுவையில் 64 சதவீதமானோருக்கும் மொனறாகலையில் 61 சதவீதமானோருக்கும் மட்டக்களப்பில் 66 சதவீதமானோருக்கும், மாத்தறை மற்றும் திகாமடுல்ல மாவட்டங்களில் 69 சதவீதமானோருக்குமே அடையாள அடடைகள் இருப்பதாகத தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஒ-ரி)

## மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு செப்ரெம்பர் மாதம்

யாழ்ப்பாணம், ஓக.31

1996 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தவிர்ந்த நல்லூர் பிரதேச செயலகம் மூலம் ஓய்வூதியம் பெறுகின்ற ஏனைய ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்பட்டு நிலுவையுடன் செப்ரெம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேநதிரன் தெரிவித்துள்ளார்.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு முரண்பாட்டு ஓய்வூதியக் கொடுப்பனவு நிலுவை ஒக்ரோபர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுடன் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (10)

# பிள்ளைகளின் ஆற்றல்களை சரியாக வளப்படுத்த வேண்டும்

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாநகர ஆணையாளர் ஆலோசனை

எங்களுடைய காலத்தில் ஆசிரியர்கள் கூறுவதையே கேட்டும் செய்தும் வந்தோம். ஆனால், இன்று பிள்ளைகள் மிகவும் உயர்ந்த இடத்திற்கு நுணுக்கமாகச் சென்றுள்ளார்கள். இதேநேரம் சுயசிந்தனை ஆற்றல்களுடனும் வளர்ந்துகொண்டும் இருக்கின்றார்கள்.

மேற்கண்டவாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா குறிப்பிட்டார்.

கதிர்காமு சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக முன்பள்ளி ஆசிரியர்களுக்காக வெளியிடப்பட்ட 'அரும்புகளின் கீதங்கள்' என்னும் பாலர்பாடல்கள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா நல்லூர் கலாசார மண்டபத்தில் யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய மாநகர ஆணையாளர் தமது உரையில், பிள்ளைகளினுடைய ஆற்றலை சரியான முறையில் வளப்படுத்திக்கொண்டு செல்லவேண்டியது முன்பள்ளி ஆசிரியர்களின் முக்கிய கடமையாகும். முன்பள்ளி ஆசிரியர்கள் பெரும்பணியை மேற்கொண்டு வருகினறார்கள். அவர்களுக்கான ஊதியக் கொடுப்பனவு என்பது மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இடம பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் இரண்டில் உள்ள முன பள்ளிகள் மிகவும் சிறந்த முறையில் இயங்குகின்றன. இங்கு கடமையாற்றும் ஆசிரியைகளுக்கு யாரும் ஊதியம் கொடுக்க முன்வரவில்லை. இந்நிலைமையினை உணர்ந்து நாம் கனடா நாட்டில் உள்ள நிறுவனம் ஒன்றின் உதவியுடன் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி வருகின்றோம்.

இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் எம்மவர்கள் நம்பிக்கையான திட்டங்களை அனுப்பினால் அதற்குப் பணம தருவதற்குத் தயாராக இருக்கின்றார்கள்.

இங்குள்ளவர்கள் சிலர் வெளிநாடுகளுக்கு கோவில்களுக்கான நிதியென்றும் பாடசாலைகளின் பழைய மாணவாகள் சங்கங்கள் என்றும் கூறிக்கொண்டு பல நிதி மோசடிகளைச் செய்துள்ளார்கள்.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் கடும் நோய்க்கு உள்ளாகி கஷ்டப்பட்டால் ஜனாதிபதி மூலம் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவையும் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நிதியிலிருந்து ஐம்பதினாயிரம் ரூபா நிதியையும் உதவியாகப் பெற்றுக்கொள்ள முடியும். நான் இத்தகையவர்களை இனம் கண்டு பலருக்குப் பெற்றுக்கொடுத்துள்ளேன்.

இந்த நிதி மூலமான உதவியினை மோசடி யான வழியில் பெரும் வர்த்தகப் புள்ளிகளும் கூடப் பெற்றுள்ளார்கள். இத்தகைய மோசடியான நிலைமைகள் மாற்றமடைய வேண்டும் - என்று அவர் குறிப்பிட்டார்.

மற்றும் தமிழீழ யாழ்.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் சி.ஆர்வலன், சு.மகேந்திரன், யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன், யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். (ப-86)

### பயிற்சி நெறி

எழுதுநர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான மூன்றாவது தொகுதி பயிற்சிநெறி எதிர்வரும் 4ஆம், 5 ஆம் திகதிகளில் யாழ் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரையில் பயிற்சிநெறியில் கலந்து கொள்ளாதவர்களின் பெயர் விவரங்களை நாளை முதலாம் திகதிக்கு முன்பதாக அனுப்பிவைக்குமாறு சகல பிரதேசச் செயலர்களுக்கும் யாழ்.அரச அதிபரினால் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி 'நியாப்' நிதி உதவி மூலம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (10-139)


உ

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான கட்டுக்குள கந்தசுவாமி ஆலயம் (நாச்சிமார்கோயில்) வருடாந்த மணவாளக்கோல



**உற்சவ விஞ்ஞாபனம்**

01.09.2004 புதன்கிழமை சகஸ்ர சங்காபிசேகம் (1008) காலை 8.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும். பகல் 12 மணிக்கு (அன்னதானம்) மாகேஸ்வரபூஜை இடம்பெறும். மாலை 6 மணிக்கு அம்பிகைக்கு விசேட பூஜை, நவசக்தி அர்ச்சனை என்பன நடைபெற்று அம்பாள் வீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளின் அனுக்கிரகத்தைப் பெற்றுய்வீர்களாக.

"ஆகம கிரியா திலகம்" (35956) (13-14-43-30)

- பிரம்மஸ்ரீ ந.சபாரத்தினக்குருக்கள். ஆலய அறங்காவலர்.



**ஜெய்ப்பூர், யு.என்.எச்.சி.ஆர். இணைந்து முச்சக்கர வண்டிகள், சக்கரநாற்காலிகள் பழுதுபார்க்கும் வேலைத்திட்டம்**

ஜெய்ப்பூர் நிறுவனம் யு.என்.எச்.சி.ஆர். உடன் இணைந்து வலுவிழந்தோரின் பாவனையிலுள்ள பழுதடைந்த முச்சக்கரவண்டிகள், சக்கரநாற்காலிகள் என்பவற்றைப் பழுதுபார்த்து வழங்கவுள்ளது. இதன் ஓரங்கமாக பழுதடைந்த வண்டிகளை அந்தந்தப் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகங்களில் வைத்துப் பொறுப்பேற்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டபின் அந்தந்த இடங்களிலேயே வைத்து மீள ஒப்படைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது. பழுதடைந்த வண்டிகளைப் பொறுப்பேற்கும் திகதி, நேரம், பிரதேச செயலர் பிரிவு, இடம் பற்றிய விவரம் வருமாறு:

| திகதி | நேரம் | பரதேச செயலர் பிரிவுகள் | பொறுப்பேற்கும் இடம் |
|---|---|---|---|
| 10.09.04. | காலை 09.00 | வேலணை, நெடுந்தீவு. | வேலணை பிரதேச செயலகம் |
| | மதியம் 01.00 | ஊர்காவற்றுறை. | ஊர்காவற்றுறை " " |
| 15.09.04 | காலை 09.00 | காரைநகர் | காரைநகர் " " |
| | மதியம் 12.30 | சங்கானை, சண்டிலிப்பாய் | சங்கானை " " |
| | மாலை 03.00 | உடுவில், தெல்லிப்பழை | உடுவில் " " |
| 27.09.04 | காலை 09.00 | மருதங்கேணி | மருதங்கேணி " " |
| | மாலை 02.00 | சாவகச்சேரி | சாவகச்சேரி " " |
| 07.10.04 | காலை 09.00 | பருத்தித்துறை | பருத்தித்துறை " " |
| | மதியம் 01.00 | கரவெட்டி | கரவெட்டி " " |
| 14.10.04 | காலை 08.30 | கோப்பாய் | கோப்பாய் " " |
| | மதியம் 12.00 | நல்லூர் | நல்லூர் " " |
| | மாலை 02.00 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் " " |

தலைவர்,
யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்,
65, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 02 ~ 04 ~ 1943 — இறப்பு 01 ~ 08 ~ 2004

### அமரர் சின்னத்தம்பி மயில்வாகனம்

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அரவணைக்க அன்பான உள்ளங்கள்
இருந்தாலும் அப்பா என்றழைக்க
நீங்கள் இல்லையே! எமையெல்லாம்
தவிக்கவிட்டு வெகுதூரம் சென்றதேனோ?

இன்று (31.08.2004) செவ்வாய்க்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆண்டாவளவு,
கரணவாய் வடமேற்கு,
வல்வெட்டித்துறை. (C/37351)(35-13-14-32)

- மனைவி, பிள்ளைகள் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

28-08-2004 ஹபரண, தம்புள்ளையில் நடந்த விபத்தில் மரணமான மண்டானைச் சேர்ந்த

### ஆனந்தம் செல்வரத்தினம்

என்பவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரின் திடீர்மறைவினால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் கணவர் ஆனந்தம் (இத்தாலி) மற்றும் பிள்ளைகளுக்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபங்களையும் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துரைராசா குடும்பம் - மீசாலை,
கிருபா குடும்பம் - லண்டன்.

(35959)(26-13-14-30)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 14 - 05 - 1943



இறப்பு 31 - 08 - 2003

### அமரர் மு.செபமாலைமுத்து

அன்பின் தந்தையே பண்பின் சிகரமே!!
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எங்கள் வாழ்விற்கு ஆதாரமாய் – இருந்து
எம்மை வழிநடத்திச் சென்ற தந்தையே!
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?

தேறுதல் சொல்ல தெய்வம் வந்தென்ன
உங்கள் திருமுகம் பார்த்தால் போதாதே!
நீ இறையடி சேர்ந்தாய் நாங்கள்
இப்போது அன்னையையும் இழந்து
தந்தையையும் இழந்து தவிக்கும்
பிஞ்சு உள்ளங்கள்.

தகவல்:

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மு.றாஜேந்திரம் + றா.லூத்தம்மா, றா.பெரியகண்ணன், றா.சின்னக்கண்ணன், றா.குமரன், றா.அபிராமி, றா.வாணி, செ.வினிஸ்ரன் + வி.சிவபாக்கியம், வி.செல்லா, வி.விஜிதா, வி.வினோதன், செ.பாபு + பா.மங்கையர்க்கரசி, பா.மயூரன், பா.மனோதரன், பா.பிரபாலினி, பா.விஜய், பா.விஜிதரன், தி.யோகச்சந்திரன் + யோ.ஞானசௌந்தரி, யோ.தர்சன், யோ.கனிஸ்ரன், யோ.தனுசியா, செ.ராஜசேகர் + ரா.ராஜேஸ்வரி, ரா.ஜெனிபன், இ.காளிமுத்து + கா.நாகம்மா, கா.ஜெயச்சித்தா, கா.இந்திராணி, கா.கர்ணாநிதி, கா.கர்ணாகரன், கா.புஸ்பவதி.

இரண்டாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

(35958)(13-14-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரக்கணக்கான புஷ் எதிர்ப்பாளர்கள் நியூயோர்க் நகரில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம்

## குடியரசுக் கட்சி மாநாட்டையொட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

நியூயோர்க்,ஓக.31

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷின் குடியரசுக்கட்சி உறுப்பினர்கள் நியூயோர்க் நகரில் தமது கட்சியின் தேசிய மாநாட்டில் கலந்துகொள்ள வந்து சேர்ந்து கொண்டிருக்கும் அதேவேளை, அதிபர் புஷ்ஷுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் வந்துசேர்ந்துள்ளார்கள்.

குடியரசுக் கட்சி மாநாட்டின் முதல்நாள் அமர்வில் முன்னாள் நியூயோக் மேயர் ருடேலப் கியுலியன், செனேட்டர் மெக்கெயின் ஆகியவர்கள் சொற்பெருக்காற்றவிருக்கிறார்கள். மாநாடு நடக்கவிருக்கும் பகுதிமுழுவதும் பெரியளவிலான பாதுகாப்பு ஏற்பாடுகளால் தடைசெய்யப்பட்டுள்ளது.

சுற்றுவட்டாரத்திலுள்ள வீதிகள் எங்கும் மோப்பநாய்களுடனும், குண்டு கண்டுபிடிக்கும் கருவிகளுடன் குழப்பம் அடக்கும் ஆயத்தங்களுடனும் பொலீஸார் அந்த வட்டாரத்தையே ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நியூயோர்க், மெடிஸன் சதுக்கப் பூங்காவில் நடைபெறவிருக்கும் மாநாட்டுக்கு வரும் பேராளர்கள் துப்பாக்கிகள், வெடிக்கும் பட்டாசுப் பொருள்கள் எதுவும் கொண்டுவரக்கூடாதெனத் தெரிவிக்கும் பட்டியல் ஒன்று வழங்கப்பட்டே வரவேற்கப்படுகின்றார்கள்.


ஞாயிற்றுக்கிழமை மெடிஸன் சதுக்கத்தைக் கடந்துசென்ற ஊர்வலத்தில் பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் மைக்கல்மூர், முன்னர் அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட கெஸ்ஸே ஜெக்ஸன் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது தகாத சம்பவங்களைப்பற்றியோ, எவரும் காயமடைந்தது பற்றியோ தகவல் எதுவும் வரவில்லை. ஆனால், சுமார் 300 பேர் கைதுசெய்யப்பட்டனர். ஊர்வலத்தின்போது நான்கு பொலீஸ் ஹெலிகொப்டர்கள் வானில் பறந்து நோட்டமிட்டன.

பல வாரங்களாக இடம்பெற்றுவந்த சட்டப் பிரச்சினைகளின் பின்னர் மத்திய பூங்காவின் ஊடாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கடந்து செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், அந்தத் தடையை மீறப்போவதாக சிலர் அறிவித்திருந்தனர். இதன்மூலம் பொலீஸாருடன் நேரடி மோதலகள் ஏற்படலாம் என்று அஞ்சப்பட்டது.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அழிக்கப்பட்ட உலக வர்த்தக மையத்திற்குச் சற்று தூரத்திலேயே குடியரசுக் கட்சி மாநாடு நடைபெறவிருக்கின்றது. அதுவும அந்தத் தாக்குதல் நடைபெற்ற மூன்றாவது ஆண்டு நினைவு தினத்திற்குச் சில தினங்களுக்கு முன்பதாக நடைபெறவுள்ளது.

புஷ் நிர்வாகம் பயங்கரவாதத்திற்கு எதிரான தனது யுத்தத்தின் ஆரம்பம் என்று கூறிக்கொள்வதைக் குறிப்பதாக இது அமைகின்றது. இரண்டாவது தடவையும் தாம் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான முக்கிய பிரசாரமாக இதனை அதிபர் புஷ் பயன்படுததுகிறார். ஆனால், மாநாட்டை நியூயோர்க்கில் நடத்துவதன் மூலம் அந்தத் துன்பியல் சம்பவத்தைத் தனது அரசியல் நலனுக்குப் பயன்படுத்துகிறார் என குற்றஞ்சாட்டப்படுகிறார் என்று செய்தி முகவர்கள் தெரிவிக்கின்றனர். புதன்கிழமை வரை அதிபர் புஷ் மாநாட்டுத்திடலுக்கு வரமாட்டார் என்றுகருதப்படுகின்றது. மாநாட்டில் வைத்து குடியரசுக் கட்சி வேட்பாளருக்கான பத்திரங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பென்சில்வேனியாவில் ஒறையோவில் தேர்தல் பிரசாரத்துக்காகப் புறப்படுவார். (ப-8)




# ஆப்கான் பள்ளியில் குண்டுவெடிப்பு; பத்துக் குழந்தைகள் பலியானார்கள்

ஆப்கானிஸ்தானில் உள்ள பள்ளியில் குண்டு வெடித்தது. இதில் 10 குழந்தைகள் இறந்தனர். 9 குழந்தைகள் காயமடைந்தனர்.

இச்சம்பவம் பக்தியா மாகாணத்தில் ஜோர் மத் என்ற இடத்தில் கடந்த சனிக்கிழமை மாலை நடந்தது. இதை அமெரிக்க இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் மாஸ்டர் சார்ஜென்ட் ஆன்பெனட் தெரிவித்தார். காயமடைந்த குழந்தைகள் இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். (8)




இந்தோனேசியாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி அதிபர் தேர்தல நடக்கிறது. இதற்காக தற்போதைய அதிபர் மேகவதி சுகர்னோமு புத்திரி தலைமையிலான கட்சித் தொண்டர்கள் பங்கேற்ற பேரணி ஜகார்த்தாவில் நடந்தது. இதில் 10 ஆயிரம் பேர் பங்கேற்றனர். ஒரு தொண்டர் முகம் மற்றும் உடலில் ஊசிகள் குத்தி பேரணியில் கலந்து கொண்ட காட்சி இது. (8)

# குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தம் இந்தியாவின் திட்டத்தை நிராகரித்தது பாகிஸ்தான்

புதுடில்லி,ஓக.31

குற்றங்களைச் செய்துவிட்டு தப்பிவிடும் குற்றவாளிகள் சிக்கினால் பரஸ்பரம் ஒப்படைக்க உடன்பாடு செய்துகொள்ளலாம் என்று இந்தியா தெரிவித்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டது பாகிஸ்தான்.

மன்மோகன் சிங் தலைமையில் புதிய கூட்டணி அரசு பதவியேற்ற பிறகு, பாகிஸ்தான் உள்துறைச் செயலர் தாரிக் முகமது தலைமையிலான குழுவுடன் இந்திய உள்துறைச் செயலர் தீரேந்திரசிங் தலைமையிலான குழு இம்மாதம் 11 ஆம், 12ஆம் திகதிகளில் இஸ்லாமாபாத்தில் பேசியது.

குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்று தீரேந்திரசிங் யோசனை தெரிவித்தபோது, அதற்கான காலம இன்னும் கனியவில்லை என்று தாரிக் அகமது கூறிவிட்டார்.

மும்பை நகரில் தாதாவாகச் செயற்பட்ட தாவூத் இப்ராஹிம், கனிஷ்கா விமானத்தை காந்தகாருக்குக் கடத்திச்சென்று 1993ஆம் ஆண்டு மும்பை நகரில் தொடர் குண்டுவெடிப்பு மூலம் ஏராளமானோரைக் கொன்றவர்கள் என்றும் மொத்தம் 25 பேர் பாகிஸ்தானில் வசிப்பதாகவும் இந்தியத் தரப்பில் தொடர்ந்து கூறப்படுகிறது.

இந்நிலையில் பாகிஸ்தானின் இந்த மறுப்பு முக்கியத்துவம் பெறுகிறது. (க-8)

# தொலைக்காட்சிச் செவ்விக்கு 6 கோடி 18 லட்சம் ரூபா ஊதியம்

## மொனிக்கா லுவின்ஸ்கி பெற்றார்

அமெரிக்க வெள்ளை மாளிகையில் பணியாற்றிய மோனிகா லுவின்ஸ்கி முன்னாள் ஜனாதிபதி கிளின்ரனுடன் உறவு வைத்திருந்ததன் மூலம் பிரபலமானவர்.

தனிப்பட்ட வாழ்க்கையில் அவருக்கு கஷ்ட நஷ்டங்கள் இருந்தபோதிலும் கிளின்ரன் விவகாரத்தால் கிடைத்த புகழால் அவருக்குப், பெரும் பணம் கிடைத்துள்ளது.

இங்கிலாந்து நாட்டின் 'சனல் 4' தொலைக்காட்சியில் அவருடைய செவ்வி இடம்பெற இருககிறது. இதற்காக அவர் பெற்ற ஊதியம் 6 கோடியே 18 லட்சம் ரூபா ஆகும்.

என் கதை ஒரு விற்பனைப் பொருளானதால் விளம்பரதாரர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்று எல்லோரும் பணம் சம்பாதிக்கிறார்கள் என்று லுவின்ஸ்கி கூறினார். (8)

# நேபாள துணைப்பிரதமரை கொலைசெய்ய முயற்சி

நேபாள நாட்டின் துணைப் பிரதமராகவும், நிதி அமைச்சராகவும் இருப்பவர் பாரத் மோகன. இவரது வீடு காத்மண்டுவில் உள்ள லலித்பூரில் இருக்கிறது. வீட்டைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. இந்த நிலையில் துணைப் பிரதமரின் வீட்டுக்கு வெளியே உள்ள மரத்தில் பதுங்கி இருந்த மர்ம நபர் ஒருவர் வீட்டை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

இதையடுத்து அந்த இடத்தைச் சேர்ந்த பாதுகாப்புப் படையினர் விரைந்து சென்றனர். அப்போது அந்த நபர் மீண்டும் கண் மூடித்தனமாக சுட்டதில் 4 பாதுகாப்பு அதிகாரிகள் பலியானார்கள். 3 பேர் காயம் அடைந்தனர். பாதுகாப்பு அதிகாரிகள் மரத்தைச் சுற்றி வளைக்கும் முன்பு மர்மநபர் தப்பி ஓடிவிட்டார். அவர் மாவோ தீவிரவாதியாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. துணைப்பிரதமர் பாரத்மோகனைக் கொல்வதற்காக இந்நபர் வந்திருக்கலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் கருதுகின்றார்கள். (8)

# கனடாவுக்கு மகாத்மா காந்தி சிலை இந்தியா அன்பளிப்பாக வழங்கியது


கனடாவில் மனித உரிமைகளுக்கான அருங்காட்சியகத்தில் வைப்பதற்காக இந்தியா அன்பளிப்பாக வழங்கிய மகாத்மா காந்தி சிலை திறக்கப்பட்டது.

கனடா நாட்டின் மத்திய பகுதியில் உள்ளது வின்னிபெக் நகரம், இங்கு மனித உரிமைகளுக்கான அருங்காட்சியகம் அடுத்த நான்கு ஆண்டுகளில் திறக்கப்பட இருக்கிறது. அதில் வைப்பதற்காக மாகாத்மா காந்தியின் உருவச் சிலையை இந்திய அரசு அன்பளிப்பாக வழங்கி இருக்கிறது.

இந்த வெண்கலச் சிலையை 500 கிலோ எடையில் சிற்பி ராம் வஞ்சிசுடர் வடிவமைத்து இருக்கிறார். தடியூன்றி மகாத்மா காந்தி நடந்து செல்லும் தோற்றத்தில் அமைக்கப்பட்ட இச்சிலையின் பீடத்தில் அவரது பெயர் பொன் மொழிகளால் இடம்பெற்று இருக்கின்றது. புதிய அருங்காட்சியகம் திறக்க இன்னும் நான்கு ஆண்டுகள் இருக்கிறது. எனவே, இச்சிலை வின்னிபெக் நகர பூங்காவின் மையப் பகுதியில் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ளது.

இந்த விழாவை ஏற்பாடு செய்த நான்ஜன் தாலா கூறுகையில், கடந்த நூற்றாண்டில் மனித உரிமைக்காக போராடிய உலகத் தலைவர்களில மகாத்மா காந்தி முதன்மையானவர் என்று புகழாரம் சூட்டினார்.

இதுகுறித்து கனடா தூதரக தகவல் தொடர்பாளர் பிரதாப் சி[illegible] வின் போதனையா[illegible] ஆகிய கொள்கைகளுக்கும், இந்திய பண்பாட்டிற்கும் செலுத்தப்படும் காணிக்கை - என்றார்.



டில்லியில் இருந்து நாளாந்தம் அலிகார் செல்லும் காலை ரயில்தான் இது. இதில் பால் பரல்களுடன் ஏறும் பால்காரர்களின் ஆக்கிரமிப்புதான் எப்பொழுதும் இருக்கும். இதனால், ரயிலில் செல்லும் பயணிகளின்பாடு தினமும் திண்டாட்டம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு, காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்திக்கு அருகில் 6 பரப்புக்காணி நாற்சார் வீட்டுடனும் விதானையார் வீதி, கொழும்புத்துறையில் (பிள்ளையார் கோயில் முன்வீதி), 2 பரப்புக் காணி வீட்டுடனும் புங்கன்குளம் வீதி, சிவதொண்டன் மடத்திற்கு அருகில், 2¼ பரப்பு வெறுங் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சுந்தரலிங்கம், 85, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(35932)

## பழைய வீடு விற்பனைக்கு

1200 சதுரஅடி பரப்புள்ள ஓட்டுவீடு, கதவுகள், நல்ல நிலையில் உள்ள நிலைகள், யன்னல்கள், வளைகள், கைமரங்கள் முதலிய வற்றோடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.கங்காதரம், சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

(35931)

## காணி விற்பனைக்கு

ஈச்சமோட்டை, கிருஷ்ணபிள்ளை வீதியில் அமைந்த ஒரு பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: சி.சி.நாதன், No.16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

(35871)

## விற்பனைக்கு

சங்கானை ரோட், மாசியப்பிட்டியில் உள்ள 4 அறைகளைக் கொண்ட நல்ல வியாபாரம் செய்யக்கூடிய கடைக்கட்டடமும், காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: ரூபன், அளவெட்டி.

(35858)

நல்ல நிலையிலுள்ள யமஹா மேற் - 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. அனைதது ஆவணங்களும் உள்ளன. தொடாபு: ஸ்ரீ குகன், (ஸப்தஸ்வரா இசைக்குழு), C/O சந்திரகுமார், விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு (கல்வியங்காடு சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில்).

(35943)

## நாடக நூல் விற்பனைக்கு

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் "வானொலி நாடகம் எழுதுவது எப்படி?" நூலைப் படித்தால் நீங்களும் நாடகம் எழுதலாம். மாணவர்கள் நடிக்கக்கூடிய மூன்று நாடகங்கள் கொண்டது. 172 பக்கங்கள் ரூபா 150/=.

(35934)

## குத்தகைக்கு

இல.112, மானிப்பாய் வீதி, முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகில், யாழ்ப்பாணத்தில் உள்ள இருமாடிக் கட்டடம் குத்தகைக்கு விடப்படும். தொடர்புகளுக்கு: 104, பலாலி வதி, திருநெல்வேலி (தபாற்பெட்டியடி) தொலைபேசி இல. 222 6341 சந்திக்கும் நேரம்: இன்றும் நாளையும் காலை 8.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

(35939)

## வீடு வாடகைக்கு

வெலிங்டன் தியேட்டர் சந்திக்கு அருகில் மாடிவீடு மட்டும் வாடகைக்கு உண்டு. தொடர்பு: 222-5458. காலை 10.00 மணிமுதல் 12.00 மணிவரை தொடர்புகொள்ளலாம். இல.09, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தில். மாலை 4.00 மணிக்குப் பின்னர் நேரில் சந்திக்கலாம்.

(35936)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாள்களில் 2Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய நம்பர் 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 01.09.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி T.P:3529, 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ நிலையம் முன்பாக.

(35898)

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வாழ்க்கை வசதிகள் அமைந்த அழகிய, சிவந்த அரச நிறுவனத்திலும், விரிவுரையாளராகவும் தொழில்புரியும் 1969, 1971 இல் பிறந்த பட்டதாரி மணமகள்களுக்குத் தகுந்த வரன்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: 0777-252191.

(35898)

# இணுவிலில் மனையியல் பயிற்சி

இணுவில் கிழக்கில் உள்ள இளைஞர் கழகத்தினரால் இலவசமாக மனையியல் பயிற்சி வகுப்பொன்று தற்பொழுது நடத்தப்பட்டு வருகின்றது. வாரநாள்களில் பி.ப. 3மணி தொடக்கம் 5.00 மணிவரை இவ்வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இரண்டு மாத காலம் நடைபெறும் இப்பயிற்சி வகுப்பை முழுமையாகப் பூர்த்திசெய்து கொள்பவர்களுக்குப் பயிற்சி முடிவில் தகைமைச் சான்றிதழ் வழங்கப் படும்.

மனையியல் பயிற்சியில் ஆர்வமுடைய யுவதிகள் இவ்வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெறமுடியும் என்றும் தகைமைச் சான்றிதழ் மூலம் வேலைவாய்ப்பைப் பெறச் சந்தர்ப்பம் இருக்கும் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

(-152)



முதலாவது பிறந்ததின வாழ்த்துகள்

1st HAPPY BIRTHDAY

தனங்களப்பு, சாவகச்சேரியைச் சேர்ந்த
**பகீரதன் – தீபா** தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

**தீபக்**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (31.08.2004) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அம்மா. ஆசை அப்பா. அம்மம்மா. அப்பம்மா. அப்பப்பா. தாத்தா. சித்தப்பாமார்களான தாசன். ஜீவன். சுமன். விமல் மற்றும் சித்திமார்களான ரூபா. பபா. குட்டி. கபில் மாமா மற்றும் உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா.

(சி-35880)(34)

# இரவுநேரத் தாக்குதல்களினால் தென்மராட்சியில் 4பேர் படுகாயம்

தென்மராட்சி,ஓக.31

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் இனந்தெரியாதோரின் தாக்குதல்களுக்கு இலக்காகி நால்வர் காயமடைந்தனர்.

கடந்த வியாழனிரவு இடம்பெற்ற இச்சம்பவங்களில் மீசாலை மேற்கைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை சின்னத்தங்கச்சி (வயது 58), மீசாலை தெற்கைச் சேர்ந்த செல்லையா ரவி (வயது 35), மிருசுவில், தவசிகுளத்தைச் சேர்ந்த குழந்தைவேலு பார்த்திபன் (வயது 18), வரணி இயற்றாலையைச் சேர்ந்த எஸ்.வேலுப்பிள்ளை (வயது 64) ஆகியோரே தாக்குதலுக்கு உள்ளானவர்களாவர்.

இந்த நால்வரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(எ-117)

# மரண அறிவித்தல்

## அழகையா மாஸ்ரர்



**(யாழ். மாநகர முன்னாள் உதவிமேயர், முன்னாள் மாநகர உறுப்பினர், தமிழரசுக் கட்சி)**

பாசையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அழகையா மாஸ்ரர் 29.08.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் யோசவீனின் அன்புக் கணவரும் டிவ்னா ஜோயற், றொபேட், குணம், ஜெயம், தனம், அருள் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**அ.பாலதாஸ்.**

797, கடற்கரை வீதி, பாசையூர். (35937)(42-34-19)

# தொடர் வரட்சியால் விவசாயிகள் சிரமம்

கோப்பாய்,ஓக.31

தற்போது நிலவும் தொடர் வரட்சியால் கோப்பாய், நீர்வேலிப் பகுதியில் பெருந்தோட்ட நிலங்களுக்கு நிலத்தடி நீர்ப்பாசனம் செய்வதில் விவசாயிகள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக இப்பகுதிகளில் காணப்படும் சிறுகுளங்களும் வரண்டு போயுள்ளன. இதனாலும் கிணறுகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளதுடன் நீர்ஊற்று வேகமும் குறைந்துள்ளது.

(72)

# இணையத் தளம் ஊடாக 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

**இணைய முகவரி: WWW.Wtrfm.com**

அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
**26 உற்சவ நாள்களிலும்**
(ஒகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம்
மூலம் செவிமடுத்து மகிழலாம்)

**உலகத் தமிழர் வானொலியுடன்**

நேரடியாக இணைய

MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969

**உலகத் தமிழர்களின் உறவுப் பாலமாக உலகத் தமிழர் வானொலி**

**ஊடக அனுசரணை:- 'உதயன்'**

# மனிதவள மேம்பாட்டுப் பகுதி நிதித்துறை

## தமிழ் ஆசிரியப் பணிநிலைக்கான வேண்டுகை

பகுதி நேரமாகவோ முழுநேரமாகவோ தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றைக் கற்பிக்கக்கூடிய இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. தகைமைகள்: 1. பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள்
 2. தமிழ்ப் பட்டதாரிகள்
 3. பண்டிதர், புலவர் பட்டங்கள் பெற்றோர்
02. பட்டறிவு: **பத்தாண்டுகளுக்குக் குறையாத தமிழ் ஆசிரியப் பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**
03. அகவை: **40 தொடக்கம் 65 வரை**
04. வேண்டுகை முடிவு நாள்: **15.09.2004**
05. வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி: பொறுப்பாளர்,
 மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
 நிதித்துறை,
 நாகதம்பிரான் வீதி, கிளிநொச்சி.
06. நேர்முகத் தேர்விற்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகை தரவேண்டும்.
07. சம்பளம்: முழுநேர ஆசிரியராகத் தெரிவுசெய்யப்படுவோருக்கு தகைமைக்கும், பட்டறிவிற்குமேற்ப பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாச் சம்பளம் வழங்கப்படும்.
08. நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள், தங்களின் தபால் முகவரிக்குக் கடித மூலம் அனுப்பிவைக்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை.

(சி-37342)(34-19)

# மிருதங்க விரிவுரையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை முன்னாள் மிருதங்க விரிவுரையாளர் ஏ. எஸ்.இராமநாதன் மற்றும் அவரது புதல்வர் சங்கீத பூஷணம் ஆர். யோகராஜன் ஆகியோர் எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக் கிழமை யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக இசைத்துறையில் வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்களைக் கௌரவிக்க விரும்புபவர்கள் 375, நாவலர் வீதி என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளலாமென மிருதங்க விரிவுரையாளர் எஸ். மகேந்திரன் கேட்டுள்ளார்.

(ஏ-201)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
16 ~ 10 ~ 1918

உதிர்வு
01 ~ 08 ~ 2004

திருமதி
**ஐயாத்துரை செல்லம்மா**

*உற்றார் உறவுகளை*
*உன்னுயிர் போல் நேசித்தாய்*
*உன் பிரிவு தாங்குதில்லை*
*உள்ளங்கள் உருகுதம்மா!*

01.08.2004 அன்று சிவபதமடைந்த எம் அன்புத் தெய்வம் ஐயாத்துரை செல்லம்மா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.08.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

63, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**- குடும்பத்தினர்.**

(35933) (30-34-16-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் வாண்மை விருத்தியில் முக்கியம் பெறும் ஆரம்ப ஆசிரிய ஆளணி

**ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திச் செயற்பாடு பல்வேறு தொகுதிகளின் செயற்பாடுகளின் நிறைவுத்தன்மையினால் விளைவது. அந்தவகையில் பிரதேச மேம்பாடு ஏற்படுவதற்கு கல்வியும் மிகவும் அவசியமான தொகுதிக் கட்டமைப்பாக இயக்கம் பெறுகின்றது. கல்வியை அடிமட்டத்தில் இருந்து படிப்படியாக கற்போரின் இயல்பூக்கங்கள் ஊடாக கட்டியெழுப்பும் பொறுப்பு ஆசிரியர்களினால் செயற்படுத்தப்பட்டு வழிப்படுத்தப்பட்டு ஓர் முழுமையான வடிவத்துக்கு கொண்டு வரப்படுகின்றது. பிள்ளையின் அடிப்படைக் கல்வியில் ஏற்படும் அடைவே அடுத்த கட்ட விருத்திக்குத் தளமாக அமையும். அந்த வகையில் அடிப்படைத் தளத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு அந்தக் காலப்பகுதியில் தொடர்புகொள்ளும் ஆசிரியர்களினால் தீர்மானிக்கப்படுகின்றது.**

**ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவத்தையும் அதனுடன் இடைவினை கொண்டு செயலாற்றும் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்தியையும் கவனத்தில் கொண்டு ஆசிரிய வாண்மைத்துவ நிலையார்கள் செயற்படுவது மிக அவசியமாகின்றது. அந்த வகையில் யாழ். மாவட்ட ஆரம்பக் கல்வி சார் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு, மாகாண, தேசிய மட்டத்திலான ஆரம்பக் கல்வி ஆளணி தேவைப்பாட்டுடன் ஒப்பீடு செய்து ஆரம்பக் கல்வி ஆளணியினர் பற்றிய முக்கியத்துவமும், ஆளணியினரைப் பயிற்றுவிக்கும் நிறுவன ஒழுங்கமைப்பும், அவற்றினது செயற்பாடுகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.**

### யாழ். மாவட்ட ஆரம்பக்கல்விக் கட்டமைப்பு

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மாணவர்களின் கல்வித்தர வீழ்ச்சிக்கு பல்வேறுபட்ட காரணிகள் அமைந்தாலும் அதில் மிக முக்கிய ஏதுவாக ஆரம்பக்கல்வி, ஆசிரியரின் பற்றாக் குறை, வாண்மைத்துவ தரநிலை, ஆசிரியரின் விருப்புணர்வு, தொழில்சார் ஈடுபாட்டின் கால நீட்சி எந்தளவுக்கு ஆரம்ப நெறியுடன் இணைவு கொள்கின்றது என்பதைப் பொறுத்து அமைகின்றது.

பிள்ளையின் கல்வித்தர மேம்பாட்டுக்கு அடிப்படைக் கல்வியே மிக அவசியமானது. அடிப்படைக்கல்வி சாதகமாக அமையின் தொடர் கல்வி விருத்தி முழுமையாக அமைவது அதிகளவு சாத்தியப்படக்கூடியதாக இருப்பதாக பல்வேறு நிலைகளின் ஆய்வுமுடிவுகள் உணர்த்தி நிற்கின்றன.

அந்த வகையில் யாழ் மாவட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோர், தேவைப்படுவோர், பற்றாக்குறையானவர்களின் எண்ணிக்கையை விவரிப்பதாக அட்டவணை 01 அமைகிறது.

(அட்டவணை - 01) (மூலம் - வடகிழக்கு மாகாணகல்வி அமைச்சு - 2004)

| வலயம் | | 1 - 5 (General) | 3-5(English) | மொத்தம் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | A | 393 | 15 | 408 |
| | R | 533 | 99 | 632 |
| | D/E | -140 | -84 | 224 |
| வலிகாமம் | A | 377 | 6 | 383 |
| | R | 563 | 121 | 684 |
| | D/E | -186 | -115 | 301 |
| தென்மராட்சி | A | 209 | 5 | 214 |
| | R | 257 | 58 | 315 |
| | D/E | -48 | -53 | 101 |
| வடமராட்சி | A | 270 | 11 | 181 |
| | R | 353 | 72 | 425 |
| | D/E | -83 | -61 | 144 |
| தீவகம் | A | 131 | 3 | 134 |
| | R | 148 | 47 | 195 |
| | D/E | -17 | -44 | 61 |

(A – Available/R-Required/D/E-Excess, Deficit)

மேற்படி தரவின் அடிப்படையில் வலய அடிப்படையில் ஆசிரிய வளத்தினது பரம்பலை அவதானிக்கமுடிகிறது. பொதுவாக ஐந்து வலயத்திலும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் போதுமானதாக அமையவில்லை என்ற தரவை அடிப்படையாகக் கொண்டு முடிவுக்கு வரமுடிகிறது.

யாழ். மாவட்டத்தில் ஆரம்பக் கல்வியில் உள்ள மாணவர் எண்ணிக்கையை அட்டவணை - 02 வலய அடிப்படையிலும், தரஅடிப்படையிலும் புலப்படுத்துவதாக அமைகின்றது. பொதுவாக ஆரம்பக்கல்வி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 54,216 ஆக இடம் பெறுவதை அவதானிக்கமுடிகிறது. மேலும் ஆரம்பப் பாடசாலைக்கு மாணவர் இணைவது தொடர்பான தரவையும், மாணவர் பாடசாலைக் கல்வியில் இணையும் தன்மை கடந்த இரு ஆண்டுகளில் குறைந்து வருவதைப் புலப்படுத்துவதாக அட்டவணை - 03 அமைகிறது.

இதனை மேலும் எளிமைப்படுத்தி அதனுடன் தொடர்பான தரவை வரைபடம் - 01 மூலமாக இலகுவாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

வரைபடம் - 01 ஊடாக ஆரம்பக் கல்வியில் மாணவரின் ஈடுபாட்டுத் தன்மை குறைவடைவதையும், உயர்வடைவதையும் அவதானிக்கமுடிகிறது. இதற்கு மாணவரின் கற்றல் ஆர்வமும் அதற்காக அரச நிறுவனத்தினது ஆளணி, மற்றும் பௌதீக வளம்சார் சாதகத் தன்மையின் சூழ்நிலைக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்த வாய்ப்புண்டு. இதனைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட சமூகத்தின் பாடசாலையில் மாணவர்கள் தமது செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டுவதிலும், வழிப்படுத்தலில் ஈடுபடுவதிலும் ஆசிரியர் வளம் இன்றியமையாததாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு அரசும், ஆசிரிய வாண்மைவிருத்தி சார் நிறுவனக் கட்டமைப்புக்களும் செயற்படுவது மிகவும் அவசியமாகின்றது.

இலங்கை முழுவதும் தமிழ்மொழி மூலம் ஆசிரியர், அதிபர், பகுதித்தலைவர் பற்றாக் குறை பற்றிய தரவை அட்டவணை - 04 ஆரம்பக்கல்விக் கட்டமைப்பை அடிப்படையாக கொண்டு விளங்குகின்றது.

இத்தரவை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்ற பொழுது ஆரம்பக்கல்விப் பாடத்தில் பொதுப்பாடம் மற்றும் ஆரம்ப ஆங்கிலப்பாடத்துக்கான ஆளணி பற்றாக்குறையைத் தேசிய அளவில் ஒப்பீடு செய்து பார்க்கமுடிகிறது. ஒட்டு மொத்தத்தில் ஆரம்பக் கல்வி நெறிக்கு அதிகளவு ஆசிரியர்கள் பயிற்றப்படுதல் அவசியமானது என்பதை உணரமுடிகிறது.


ஆசிரிய ஆளணியினரைப் பொறுத்தமட்டில் வடகிழக்குப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் ஆரம்பக்கல்விக்கு 2,700 பேரும், ஆங்கில ஆசிரியர் 1,700 பேரும், ஏனைய பாடங்களுககு 1,600 ஆசிரியர்களும் பற்றாக்குறையாக இருப்பதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன எனலாம். இதனால் வடகிழக்கு பிரதேசம் கல்வித் தர வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லல் தவிர்க்க முடியாததாகிறது. அதிலும் கல்வித்தர நிலையில் உயர்வாக இருந்த யாழ்.மாவட்டமும் பின்னடைந்து வருவதையும் காணமுடிகிறது. இதற்கு ஆசிரிய வாண்மைவிருத்தி நிலைகள் ஊடாக ஆசிரியர்கள் வாண்மைப்படுத்தல் அவசியமாகிறது.

(அட்டவணை - 02)

| வலயம் | தரம் 1 | தரம் 2 | தரம் 3 | தரம் 4 | தரம் 5 |
|---|---|---|---|---|---|
| தீவகம் | 716 | 781 | 994 | 907 | 870 |
| யாழ்ப்பாணம் | 3146 | 3046 | 3774 | 3486 | 3537 |
| தென்மராட்சி | 1198 | 1346 | 1382 | 1295 | 1446 |
| வடமராட்சி | 1857 | 2072 | 2412 | 2107 | 2159 |
| வலிகாமம் | 2787 | 2663 | 3537 | 3243 | 3455 |
| மொத்தம் | 9704 | 9908 | 12099 | 11038 | 11467 |

(மூலம் - வடக்குகிழக்கு மாகாண கல்வி அமைச்சு - 2004)

தேசிய ரீதியில் ஆரம்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதை காணமுடிகிறது. இதற்கு முக்கிய காரணமாக ஆசிரியர்களின் மனநிலையும், தாழ்வுச்சிக்கலும், போதிய வாண்மைத்துவ விருத்தி இன்மையும், சுயமதிப்புணர்வும், தொடர்கல்வியும் அதனால் பெறும் பதவி உயர்வும் முக்கியமாகக் காணப்படுகிறது. அந்த வகையில் வரைபு - 02 உண்மையான எறியப்பட்ட ஆரம்ப ஆசிரியர் வழங்கல் 1996 - 2003 காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு நோக்கப்படுகிறது.




மேற்படி தரவின்படி ஆரம்பநிலைக்கான ஆளணி வளம் படிப்படியாகக் குறைவடைந்து வருவதைக் காணமுடிகின்றது. இதனை நிவர்த்தி செய்யப் பல்வேறு அமைப்புக்கள் செயற்படல் அவசியமாகிறது. இதன் விளைவை இடைநிலைக்கல்வி, உயர்தரக்கல்வி மட்டங்களில் ஏற்படும் கல்விசார் அடைவுகளில் ஏற்படும் வீழ்ச்சியைக் கொண்டு உணரமுடிகிறது. அந்த வகையில் அட்டவணை - 05 அதனை உறுதிப்படுத்தும் தரவாக அமைவதைக் காணலாம்.

## கல்விப்புலம்சார் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா?

இத்தரவினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தமிழ்மொழி தவிர ஏனைய பாடங்களில் பெறுபேறுகளில் நூறுவீதம் தேசிய சராசரியை விடக் குறைவாக உள்ளதை அவதானிக்கலாம். மேலும் விஞ்ஞானம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களின் சித்தி நூறுவீதம், மாகாண சராசரி சித்தி நூறு வீதத்திலும் குறைந்த நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைக் கருத்திற்கொண்டு ஆரம்பநிலை கல்விசார் செயற்பாட்டில் விருத்தி நிலை செயற்றிட்டங்களை அமுல்படுத்துவது அவசியமாகிறது.

ஆரம்பநிலைக்குக் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு 1996 தொடக்கம் 2005 வரைக்கு தேசிய ரீதியில் தேவையான ஆரம்ப ஆசிரியர்கள் பின்வருமாறு எதிர்வு கூறப்பட்டுள்ளமையையும் அட்டவணை - 06 மூலம் ஒப்பீடு செய்து பார்க்கமுடியும்.

(அட்டவணை - 03)

| வலயம் | மாணவர் எண்ணிக்கை - தரம் - 1 | | | | |
|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 |
| யாழ்ப்பாணம் | 2802 | 2806 | 3049 | 2726 | 3146 |
| வலிகாமம் | 2650 | 2588 | 3204 | 2772 | 2787 |
| தென்மராட்சி | 1568 | 1476 | 1341 | 1176 | 1198 |
| வடமராட்சி | 1788 | 1662 | 2170 | 1809 | :857 |
| தீவகம் | 630 | 650 | 720 | 576 | 716 |
| மொத்தம் | 9438 | 9182 | 10484 | 9059 | 9704 |

(மூலம் - வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு - 2004)

வடக்கு - கிழக்கு மாகாணம் என்ற அடிப்படையில் ஆரம்ப ஆசிரியர்களின் தேவை அல்லது எதிர்வு கூறப்பட்ட ஆசிரியர்கள் 2001, 2003 ஆண்டுகளில் எவ்வாறு அமைகிறது என்பதை அட்டவணை - 07 ஐ அடிப்படையாகக் கொண்டு சுட்டிக்காட்டமுடியும்.

இவ்வாறாக யாழ்ப்பாண மாவட்ட அடிப்படையிலும், வடக்கு - கிழக்கு மாகாண ரீதியிலும், தேசிய மட்டத்திலும் ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஆசிரிய வள ஆளணியினர் பற்றிய ஓர் ஒப்பீட்டு ரீதியான பார்வையை நோக்குவதனூடாக ஆரம்ப ஆசிரியர்களின் முக்கியத்துவம், தேவை, ஆரம்பக்கல்வியில் போதிக்கும் ஆசிரியரின் வாண்மைத்துவ மேம்பாட்டின் அவசியத்தன்மையை உணர்ந்துகொள்ள முடிகிறது.

(அட்டவணை - 03)

| | யாழ்ப்பாண மாவட்டம் | | | வ.கி.மா | தேசியம் |
|---|---|---|---|---|---|
| பாடம் | தோற்றியோர் | சித்தி | சித்தி வீதம் | சித்தி வீதம் | சித்தி வீதம் |
| தமிழ் | 12284 | 9706 | 79.01 | 78.86 | 76.69 |
| கணிதம் | 11831 | 4732 | 40.00 | 39.12 | 40.03 |
| விஞ்ஞானம் | 11115 | 4817 | 43.34 | 47.07 | 54.19 |
| சமூகக்கல்வி | 12113 | 7930 | 65.47 | 69.62 | 77.72 |
| ஆங்கிலம் | 17415 | 3613 | 20.75 | 20.10 | 27.44 |

(மூலம் - க.பொ.த.சா.பரீட்சை பகுப்பாய்வு-வ.கி.மா.2002)

### வாண்மைத்துவ நிறுவன அமைப்பும் செயற்பாடுகளும்




யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திச் செயற்பரிமாணங்களில் யாழ். பல்கலைக்கழகம், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலைகள், தேசிய கல்வி நிறுவகம், ஆசிரிய வளநிலையம் திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி, தொலைக்கல்வி நிறுவனம், அரசசார்பற்ற நிறுவன அமைப்புக்கள் பங்குகொண்டு வருவதைக் காணமுடிகிறது.

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
ஆசிரியர், தீவகக் கல்விவலயம்

ஆசிரிய வாண்மைத்துவ மேம்பாட்டில் இந் நிறுவனங்கள் சேவை முன்பயிற்சி, பட்டப் படிப்புக்குப் பின்னரான பயிற்சி, தொடர்கல்விச் செயற்பாடுகள், செயலமர்வுகள், விசேட கருத்தரங்குகள் என்ற முறைமைகளினூடாக வாண்மைத்துவ அணுகுமுறைகள் இடம்பெற்று வருவதைக் காணமுடிகிறது. ஆரம்பக் கல்வித் துறையை பொறுத்தமட்டில் சேவை முன் பயிற்சி என்பது சிறுபிள்ளைகளை வழிப்படுத்தவும், அவர்களுடன் இணைந்து செயற்படுத்த வழிப்படுத்துவதாக அமைதல் முக்கியமாகும். அதற்கேற்ற பயிற்சி முறைமைகள் இவ்வமைப்புக்கள் ஊடாக நன்கு திட்டமிடப்பட்டு வழங்கப்படுதல் நன்று.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தமட்டில் ஆளணியினரைப் பயிற்றுவித்தல் என்பது முக்கியமான விடயம். க.பொ.த. சாதாரணதரம், உயர்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை தேடும் பட்டதாரிகளுக்கு

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர பொதுக்கூட்டமொன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். ஆரியகுளத்தடியிலுள்ள புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பட்டதாரிகளுக்கு வழங்கப்படவிருக்கும் நியமனம் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதால் பட்டியலில் பெயர் வந்த பட்டதாரிகளும் பெயர்வராத பட்டதாரிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9-13)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1953
06
22



மறைவு
2003
08
31

### அமரர் த.இராமலிங்கம்

ஓராண்டு கடந்து விட்ட போதும்
எங்கள் நெஞ்சில் உங்கள் நினைவின்
ஈரம் இன்னும் காயவில்லை – அப்பா!
இமைகள் இன்னும் உலர்ந்து போகவில்லையே
எத்தனை வருடங்கள் சென்றாலும்
மனமாறாதே – அப்பா!

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தம்பகாமம்,
பளை.
(35786) (33-17-18)
மனைவி,
பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நினைவு ஆராதனை அழைப்பும்

மலர்வு
18
-
07
-
1924



உதிர்வு
01
-
08
-
2004

அமரர்

### மோசஸ் சாள்ஸ் அரியரத்தினம்

"என் ஆத்மாவே கர்த்தரை ஸ்தோத்தரி
என் முழு உள்ளமே அவருடைய
பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி
என் ஆத்மாவே கர்த்தரை ஸ்தோத்தரி
அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே"

எமது குடும்பத் தலைவரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும் எமது துக்கத்தில் பங்குகொண்டும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (31-08-2004) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் ஆராதனையிலும் பங்குகொள்வதுடன் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிங்கைநகர்,
புலோலி தெற்கு,
புலோலி.
(35885) (33-17-18-26)
பிரிவால் துயருறும்:
மேரி சுகந்தினி
(அன்பு மகள்).


# ஊடக அதிகாரியை இலக்குவைத்து சூடு

சாய்ந்தமருது,ஓக.31

கல்முனைப் பிரதேச பத்திரிகையாளரும், கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் ஊடகப் பிரிவைச் சேர்ந்தவருமான அப்துல் ஜப்பார் சமீம் கொலை முயற்சியிலிருந்து மயிரிழையில் உயிர்தப்பியிருக்கின்றார்.

சம்மாந்துறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மஹாபொல இறுதிநாள் நிகழ்வில் பங்குபற்றிவிட்டு நேற்றுமுன்தினம் அதிகாலை 12.55 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வீடு வந்த போது, இவரின் வீட்டுக்கு அருகில் முகமூடியுடன் காத்திருந்த ஆயுதக் கோஷ்டியினர் இவரைக் குறிவைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

இவருக்குக் குறிவைத்த துப்பாக்கிக் குண்டு தெய்வாதீனமாக இவரைத் தாக்காமல் மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியில் பின்புறமாக நுழைந்து முன்புறமாக வெளியேறியிருக்கின்றது.

கல்முனைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். காரைதீவு விசேட அதிரடிப்படையினரும் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கின்றனர். (க)

# லயன்ஸின் வெளியீடு மீண்டும் வெளியாகும்

தென்மராட்சி,ஓக.31

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் 'சாவா - லயன்ஸ்' என்னும் மாதாந்த வெளியீட்டினை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற இடம்பெயர்வின் பின்னர் இடைநிறுத்தப்பட்ட மாதாந்த வெளியீட்டினை இம்மாதம் தொடக்கம் வெளியிடவுள்ளனர்.

இந்த மாத வெளியீட்டின் முதற்பிரதியை கடந்த சனியன்று கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.சிவானந்தத்திடம் கையளித்து ஆரம்பித்து வைத்தார்.

கழகத்தினால் மாதாந்தம் மேற்கொள்ளப்படும் சேவைகள், செயல்திட்டங்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் இந்த வெளியீட்டின் மூலம் தெரிவிக்கப்படுமென அதன் ஆசிரியர் லயன் எம்.பீ.சண்முகநாதன் தெரிவித்தார். (எ-117)

# கல்வியியல் கல்லூரி ஆசிரியருக்கு நியமனம்

தென்மராட்சி,ஓக.31

கல்வியியல் கல்லூரி பயிற்சியினை முடித்து வெளியேறிய டிப்ளோமா ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகத்தில் கடந்த 9,10,11,12 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்துகொண்டோருக்கான நியமனக் கடிதங்கள் கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. செப்ரெம்பர் இரண்டாம் திகதி தொடக்கம் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (எ-117)

# ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

கல்வளை வீதி, சண்டிலிப்பாயிலுள்ள காளி அம்பாள் ஆலயம் புதிதாக புனரமைக்கப்பட்டுவருகின்றது.

இந்த ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் யாவும் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியடையும் என்றும் -

இப்புனரமைப்புக்கான நிதியினை இந்தக் கிராமத்திலுள்ள மக்களிடமிருந்தே திரட்டப்பட்டு வருகின்றது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (13)

# 'சலூன்' திறந்திருக்கும் நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

சிகை அலங்கரிப்பு நிலையங்களை இனிமேல் இரவு 9 மணிவரை திறந்திருக்க முடியுமென யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், சிகை ஒப்பனையில் கிராமியத் தொழிலை மேற்கொள்ளுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் சங்கம் மேலும் அறிவித்துள்ளது. (9)

# யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பணிக்கு மேலும் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவர்

கொழும்பு,ஓக.31

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும். புதியவர்களைப் பணிக்குச் சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சைகள் விரைவில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடக்கவிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் மனிதப் படுகொலைளும் வன்முறைச் சம்பவங்களும் அதிகரிதத வண்ணமே இருக்கின்றன.

ஆனால், தற்பொழுது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஆக ஐம்பதுபேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். அதிகரித்துவரும் சம்பவங்களால் கண்காணிப்புக் குழுவினின் பங்கு, பணி விஸ்திரிக்கப்படவேண்டியுள்ளது. அதனால், பணியில் ஈடுபட்டுள்ள தனது உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டிய கட்டாயம் கண்காணிப்புக் குழுவுக்கு ஏற்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருஹொவ்டே பொருத்தமான நபர்களைத் தெரிவுசெய்வதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பியதும், அவரை புருஹொவ்டே சந்திக்க விருக்கின்றார் எனத் தெரிகின்றது.

அந்தச் சந்திப்பு முடிந்ததும் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒஸ்லோ திரும்புவார். அங்கு அவர், கண்காணிப்புக் குழுவுக்கு ஆள்களைத் திரட்டுவதற்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்துவார் எனத் தெரிகின்றது. (க)


## ஒன்பதாம் ஆண்டு நினைவுகள்

தோற்றம்
1942
10
26



மறைவு
1995
09
11

### அமரர் முருகேசு கனகசபை

(ஆசிரியர்)

எம் வாழ்வு வசந்தம் வீச
எங்களுக்காய் வாழ்ந்த அப்பாவே!
ஒன்பது ஆண்டுகளும் போய்விட்டன
நம் துயர் துடைக்க இனி ஒரு
பிறவி எடுக்க மாட்டீர்களா?

கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி.
(35763) (33-17-18)
உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை நாராயணலிங்கம்

(Rtd. P.W.D. Overseer, Nuwaraeliya)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சங்கானை தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நாராயணலிங்கம் (Rtd. P.W.D. Overseer) அவர்கள் 29.8.2004 ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் பொன்னுத்துரை-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்ற P.W.D. Overseer செல்லப்பா-நாகம்மா தம்பதிகளின் மருமகனும் அரியரத்தினத்தின் அன்புக் கணவரும் ரஞ்ஜினி, சந்திரமோகன் (உரிமையாளர், Dilka Furniture Palace, யாழ்ப்பாணம்), ரூபன் (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கைலநாதன் (C.H.F. International), கலாநந்தி (கொழும்பு), லிங்கேஸ்வரி (Canada) ஆகியோரின் மாமனாரும் நிரோஷன் (N.S.B. பருத்தித்துறை), தனுஷன், ஐஸ்வரியா, ஐஸ்வரன், சுஜீவ் (பொறியியல் மாணவன், Canada), சிந்தியா ஆகியோரின்- அருமைப் பேரனும் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை (மலேசியா), திருமதி இ.மகேஸ்வரி, நவசுந்தரலிங்கம் (மலேசியா), திருமதி சி. மகாயோகேஸ்வரி (பரணி பார்மசி, யாழ்ப்பாணம்), திருமதி க. ராஜேஸ்வரி, திருமதி ச.பரமேஸ்வரி, உருத்திரசிங்கம் (U.K.) சோமசூரிய சிங்கம் (சிங்கம் பார்மசி, யாழ்ப்பாணம்) காஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி, சுந்தரானந்தன் (சவூதி அரேபியா) ஆகியோரின் அருமைச் சகோரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2004) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

R1/4, அன்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு - 5.
தொ.பே.: 011 2592115
(35786) (33-17-18)
தகவல்:
நா.சந்திரமோகன்
(மகன்).

Dialog GSM
டயலொக்
கையடக்கத் தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
kit
எந்நேரமும் உன்னுடன்..

WESTERN UNION MONEY TRANSFER
வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
ஒரு சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைத்திட
எம்மை நாடுங்கள்:

பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற சகல விதமான



SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட

ஸ்ரீ முருகன் SRI MURUGAN 303,K.K.S.Road Jaffna. ☎ 021 222 5392
தொலைத் தொடர்பகமும் முகவர் தபாலகமும் Tele Communication & Agency Post Office. E.mail del-smskr@eureka.lk Fax : 222 3435

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமானத்துடன் உணவுத் தேவையையும் ஈடுசெய்யும் கோழிவளர்ப்பு

விலங்கு வேளாண்மை என்பது விவசாயத்தின் ஓர் அங்கமாகும். இது பண்ணை விவசாயம் எனவும் கூறப்படும். ஆடு, மாடு, முயல், பன்றி போன்ற கால்நடைகளை வளர்ப்பதும் கோழிகளை வளர்ப்பதும் இத்துறையினுள் அடங்கும்.

விவசாயிகளுக்கு வருமானத்தைத் தேடிக் கொடுப்பதுடன், மக்களின் உணவுத் தேவைகளும் இப் பண்ணை முறைகள் மூலம் ஓரளவு பூர்த்தி செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திலே கோழிப் பண்ணைத் தொழில், கோழி வளர்ப்பு என்பன வீடுகளில் சிறிய அளவிலும், சில தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் என்பவற்றால் சிறிய பெரிய அளவிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

அச்சுவேலியில் அமைந்துள்ள கோழிப் பண்ணை சற்றுப் பெரிய அளவில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் கோழிப்பண்ணை வளர்ப்புப் பற்றி யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உப தலைவரும், கோழிப் பண்ணை அதிகாரியுமான எம்.சிவலோகநாதன் தெரிவித்த கருத்துக்களை இங்கே தருகின்றோம்.

### கோழிப்பண்ணை

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நாங்கள் நெதர்லாந்து நாட்டிலிருந்து தரமான முட்டையிடும் தாயினக் கோழிகளையும், இந்தியாவில் இருந்து புறொயிலர் இனக் கோழிகளையும் இறக்குமதி செய்திருந்தோம். அவற்றைப் பண்ணையில் பராமரித்து வளர்த்தோம்.

★ லேயர் இனம்:- முட்டையிடும் கோழி (லேயர்) இனங்களான போவான்ஸ் (bovans) கோல்ட்லைன் (Gold line) ஆகிய இருவகைக் கோழி இனங்களைத் தருவித்து பண்ணையில் அவற்றை வளர்த்து முட்டையிட்டு குஞ்சு பொரிக்க வைத்து அவற்றைத் தற்போது மக்களுக்கு விநியோகித்து வருகின்றோம். இந்த விநியோக முறை முழுவதும் கால்நடை வைத்தியர் திணைக்களத்தினரின் முழு ஒத்துழைப்புடனும் தனிப்பட்ட முறையிலும் எமது சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

★ புறொயிலர் இனம்:- இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புறொயிலர் இனமான ஏவியன் (Avion) இனக் கோழிகளும் இப்போது குஞ்சுகள் பொரித்து அவையும் விநியோகிக்கப்படுகின்றன.


### போட்டி நிலை

இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் (ஒரு நாள் குஞ்சு) 40 ரூபாவாகவும் முட்டையிடும் தாயினக் குஞ்சுகள் 45ரூபாவாகவும் விநியோகித்து வருகின்றோம். ஏற்கனவே 55ரூபாவாக விற்பனை செய்து வந்த தாய் இனக் குஞ்சுகளை பண்ணையாளர் நன்மை கருதியும் விநியோகத்தில் ஏற்பட்ட போட்டி நிலையாலும் 45ரூபாவாகக் குறைத்து விநியோகிக்கின்றோம். சேவல் குஞ்சு ஒன்றை ஆறு ரூபாவுக்கு வழங்குகிறோம்.

கொழும்பில் இருந்து தனிப்பட்ட வியாபாரிகளால் குஞ்சுகள் கொண்டு வரப்பட்டு அபரிமித இலாபத்துடன் 65-70ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. எமது பண்ணையில் இருந்து குஞ்சுகள் விற்பனைக்கு வந்தவுடன் அவர்கள் தமது விற்பனை விலையைத் திடீரென 50ரூபாவாக குறைத்து விட்டனர். எமது விநியோக விற்பனையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற மனநிலையில் - போட்டிநிலையில் - அவர்கள் இவ்வாறு செய்தபோது 55ரூபாவாக விற்பனை செய்து வந்த குஞ்சுகளை நாம் 45ரூபாவாகக் குறைத்து விட்டோம். எந்தத் தொழிலிலும் போட்டி இருந்தால் தானே முன்னேற்றம் காணமுடியும்?

### பண்ணை பொறுப்பேற்பு

கடந்த காலங்களில் கால்நடை வைத்தியர் திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டு வந்த இப் பண்ணையைக் கடந்தவருடம் ஜூன் மாதம் தான் நாங்கள் கையேற்றோம். கால்நடை வளர்ப்பில் கூடிய அனுபவம் இருந்தமையாலும் பண்ணையைச் சிறந்தமுறையில் பராமரித்து முன்னெடுப்போம் என்ற நம்பிக்கையாலும் யாழ். மாவட்ட மக்களுக்கு இலாபநோக்கின்றி சேவை அடிப்படையில் பணிபுரிந்துவரும் எமது தன்மையாலும் எம்மீது நம்பிக்கை கொண்டு யாழ்ப்பாண அரச அதிபரும் கால்நடை வைத்தியர் திணைக்கள உதவித் திட்டமிடல் பணிப்பாளருமாக இணைந்து இப்பண்ணையை எம்மிடம் ஒப்படைத்துள்ளனர்.



### மாவட்டத்தின் கோழித் தேவை

தற்போது ஒரு மாதத்தில் 5 ஆயிரம் தொடக்கம் 6 ஆயிரம் வரையான குஞ்சுகளை உற்பத்திசெய்து விநியோகித்து வருகிறோம். யாழ்ப்பாண மாவட்ட மக்களுடைய கோழித் தேவையை நாம் பூர்த்திசெய்ய வேண்டுமாக இருந்தால் இதேபோன்று* மூன்று மடங்கான பண்ணைகள் அமைக்கப்படவேண்டும். மூன்று மடங்காக உற்பத்திகளும் அதிகரிக்கப்படவேண்டும். வருங்காலத்தில் பண்ணை விரிவாக்கம் செய்யப்படும்போது யாழ் மாவட்ட கோழித்தேவை தன்னிறவைப் பெறும் என நம்புகிறேன்.

### நோய்களும் பிரச்சினைகளும்

பண்ணையை நிர்வகிக்கப் பிரத்தியேகமாக ஒருகால்நடை வைத்தியரைச் சங்கம் நியமித்துள்ளது. அவரது மேற்பார்வையுடன் பண்ணை பராமரிக்கப்படுகின்றது. பண்ணையை விரிவாக்கம் செய்து குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரிக்கும் பொழுது எமது நிர்வாகச் செலவுகள் குறைந்து இலாபம் அடையக்கூடிய நிலை ஏற்படும்.

தாய் இனக்கோழிகளாக இவை இருப்பதால் இவற்றுக்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட தீவனங்களை அதிக விலை கொடுத்து கொழும்பிலிருந்து தருவிக்கவேண்டியுள்ளது.

கடந்த ஐந்து மாதங்களாக இவ்வாறு அதிக விலை கொடுத்து வாங்கிய பிரத்தியேகத் தீவனங்களை வழங்கிக் கோழிகளை வளர்த்து இப்போது தான் அவற்றின் பயனைப் பெறத் தொடங்கி உள்ளோம். 30லட்சம் ரூபாவுக்கு மேல் முதலீடு செய்து இம் முயற்சியைத் தொடங்கினோம். எதிர்கால நிலைமை, ஏற்படப்போகும் மாற்றங்கள் என்பவற்றைப் பொறுத்தே எமது முயற்சியின் இலாப நட்ட விவரங்களைக் கணக்கிட முடியும்.

கால்நடை வைத்தியரின் சிபார்சுப்படி தருவிக்கப்பட்ட முட்டையிடும் இந்தத் தாய்க் கோழி இனங்கள் நான்கு மாதங்களிலேயே பண்ணையாளர்களுக்கு பயன் கொடுக்க ஆரம்பிக்கின்றன. நான்கு மாத ஆரம்பத்தில் இவை இடும் முட்டைகள் சிறியவையாக இருப்பினும் ஒரு சில நாள்களில் முட்டைகள் அவற்றுக்குரிய பருமனை பெற்றுவிடுகின்றன.

தற்போது இவ்விரண்டு இனங்களையும் சேர்த்து சுமார் 1500 கோழிகள் நம் பண்ணையில் உள்ளன. பண்ணையை நாம் இயக்குவதன் நோக்கம் சேவை அடிப்படையில் நல்ல இனக் கோழிகளைக் குறைந்த விலையில் வழங்கி இலாபகரமான முறையில் பண்ணையாளர்கள் தொழிலை மேற்கொள்வதை ஊக்குவித்தலாகும். சேவை அடிப்படையில் நாம் இதனை மேற்கொள்வதானால் அரசு இயன்றளவு வரை மானிய அடிப்படையில் உதவிகளை வழங்கவேண்டும். அப்போது பண்ணையை மேலும் விரிவாக்கம் செய்யக்கூடியதாக இருக்கும்.

### நோய்கள்

பண்ணையில் கோழிகளுக்கு நோய்கள் ஏற்படாதிருக்க வேண்டிக் கால்நடை வைத்தியர் ஒருவரை நிரந்தரமாக அமர்த்தியுள்ளோம். அவ்வப்போது பரிசோதனைகளை மேற்கொண்டு தடுப்பு மருந்துகளையும் வழங்கிவருகிறார். காலநடை வைத்தியர் திணைக்களத்தின் பரிபூரண ஒத்துழைப்பு, ஆதரவு, ஆலோசனை என்பன எமக்கு எப்பொழுதும் கிடைத்துவருகின்றன.

எமது கோழிப்பண்ணைக்குள் வெளிஆள்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பண்ணையில் வேலை செய்யும் ஊழியர்களோ, வைத்தியர்களோ கூட பண்ணைக்குள் செல்லும் முன்னர் தொற்றுநீக்கி மூலம் கால்களைக் கழுவித் தொற்றுநீக்கம் செய்துகொண்டபின்பே உட்புகமுடியும்.

**தொகுப்பு: வி.பி.சர்மா**

தற்போது நோய்கள் பற்றி எமக்கிருக்கும் பிரச்சினை எனனவென்றால், பண்ணையைச் சுற்றிவர உள்ள அரச காணிகளில் குடியேறி இருப்பவர்களால் வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகள் பண்ணைக்குள் நுழைந்து விடுகின்றன. அவற்றின் மூலமாக நோய்கள் எமது பண்ணைக கோழிகளுக்குப் பரவக்கூடிய அபாயநிலை உள்ளது. இக்கோழிகளைப் பண்ணைக்குள் வரவிடாது கூட்டில் அடைத்து வளர்க்கக்கூடியதான நடவடிக்கைகளை செய்துதருமாறு நாம் அரச அதிபரையம், ஏனைய அமைப்புகளையும் கோரியுள்ளோம்.

### கட்டுப்பாடு தேவை

குடாநாட்டின் சுற்றுச்சூழல் சுவாத்தியத்துக்கேற்ற முறையில் கோழி இனங்கள் வரவழைக்கப்படவேண்டும். எமது பண்ணையில் வாழும் இத்தகைய பொருத்தமான குஞ்சுகளைப் பண்ணையாளர்கள் தயக்கமின்றிப் பெற்று வளர்க்கலாம். அதன்மூலம் இலாபம் தேடும் வழிகளைத் தேடவேண்டும்.

சந்தையில் உள்ள விலை வாய்ப்புகளுக்கேற்ப நாம் விலையை அடிக்கடி மாற்றவேண்டியுள்ளது. முட்டையின் விலை அதிகரிக்கும் பொழுது பிறமாவட்டங்களில் இருந்து அதிகளவில் முட்டைகள் இங்கு கொண்டுவரப்படுகின்றன. இதனால், நாம் அதிகம் பாதிக்கப்படாவிட்டாலும், பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டு அவர்களுக்குக் கிடைக்கும் இலாபங்களும் தடுக்கப்படுகின்றன.

ஏனைய மாவட்டப் பண்ணையாளர்களைவிட அதிக முதலீடு நாளாந்த செலவீன அதிகரிப்பு என்பவற்றுக்கு முகம் கொடுத்தே எமது பண்ணையாளர்கள் கேரழிவளர்ப்பில் ஈடுபடவேண்டியுள்ளது.

எனவே, பிற மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படும் முட்டைகள், குஞ்சுகள் போன்றவற்றிற்கு ஆயவரி கூடுதலாக விதித்துக் குடாநாட்டுப் பண்ணையாளர்களைப் பாதுகாக்கவேண்டியது நிர்வாகத்துறையினரைச் சார்ந்த விடயமாகும்.

### எதிர்காலத்திட்டங்கள்

தாய் இனக்கோழிகளை வளர்ப்பதற்கென கொழும்பில் இருந்து தருவிக்கப்படும் பிரத்தியேகமான கோழித்தீவனத்தை யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் உற்பத்திசெய்து இப்பண்ணையின் தீவனத்தேவை முழுவதையும் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம். மேலும், ஒருநாள் குஞ்சுகளை ஒருமாதம்வரை வளர்த்துப் பண்ணையாளர்களுக்கு அவற்றை 10, 25 குஞ்சுகளாக விநியோகிக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

தற்போதைய நிலையில் ஒருநாள் குஞ்சுகளே விலைபோய்க் கொண்டிருக்கின்றன. எஞ்சுகின்ற குஞ்சுகளைக் கூட ஒருசில நாள்கள், வாரங்களில் பண்ணையாளர் வந்து வாங்கிச் சென்று விடுகின்றனர்.

ஒருமாதக் குஞ்சுகளைப் பெறவிரும்பும் பண்ணையாளர்கள் திருநெல்வேலியில் உள்ள எமது சங்கத்தலைமைக் காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ள முடியும். ★

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

# தாவரப் பீடைகளை அழிக்கவல்ல வேப்பஞ்சாறு..



வேம்பு இலங்கையின் உலர் வலயத்தில் பெருமளவு காணப்படும் மரமாகும். மருத்துவப் பயன்கள் உள்ள இம் மரத்தின் விதைகளை ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கோவாப்பயிரைப் பாதிக்கும் புழுக்களை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த வேப்பம் விதைகள், பேருதவி புரிகின்றன. என்பதை, விவசாயத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

வேப்பம் விதைகளை இடித்துப்பிழிந்து எடுக்கப்படுகின்ற சாறு(திரவம்) நவீன கிருமிநாசினிகளைப் போன்றே பீடைகளை அழிக்கவல்லது. இரசாயன விளைவுகளைத தராத இயற்கை நாசினி யான இது இலாபகரமானதும் கூட. நுகர்வோருக்கும், பீடைப் பூச்சிகளின் இயற்கை எதிரிகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுத்தாதன. சூழல் மாசடைவதைத் தடுக்கவல்லன. இரசாயன கிருமிநாசினிகளுக்கு, பீடைகள் நாளடைவில் இசைவாக்கம் அடைகின்றன. இதனால், பீடைகளைக் கட்டுப்படுத்துவது குறைவடைகிறது. வேப்பம் நாசினிக்கு எதிர்ப்புத்தன்மையுள்ள, பீடைகள் உருவாகாது. இந்த நாசினியைப் பயன்படுத்தும்போது, பொருளாதாரச் செலவைக் கட்டுப்படுத்துவதோடு, எமது வீட்டில் நாமே இலகுவாகத் தயாரித்தும் கொள்ளமுடியும்.

மரங்களுக்குக் கீழ் வீழ்ந்துள்ள நன்கு முற்றிய வேப்பம் விதைகளைச் சேகரித்துக் கழுவி வெயிலில் உலர வைக்க வேண்டும்.

பயிர்மீது பீடை பூச்சித் தாக்கங்கள் ஏற்படுவதை அவதானிக்கும்போது, விதைகளை உடைத்துப் பருப்பை வேறாக்கித் தேவையான அளவை எடுத்து பிளாஸ்ரிக் பாத்திரத்தில் தேவையான அளவு நீர் விட்டு 12 மணிநேரம் ஊறவைக்க வேண்டும்.

மறுநாள் இதற்கு மேலும் நீர் சேர்த்து இரண்டு அல்லது மூன்று தடவை கசக்கிப் பிழிந்து, பிழிந்த நீரில் சவர்க்காரக் கரைசல் சேர்த்து, அந்தக் கலவையை, தெளிகருவியினூடாக, விசிறலாம்.

தயாரிக்கப்பட்ட கலவையை ஓரிரு வாரங்கள்வரை வைத்துப் பயன்படுத்தலாம். ஒரு லீற்றர் கலவைக்கு 20 லீற்றர் வரையான நீர் கலந்து பயன்படுத்தலாம். கோவாப் பயிரில் புழுக்களை இனங்காணுமிடத்து இதனை விசிறலாம்.

**இ.தனபாலசிங்கம்**

3 நாள்களுக்கு ஒருமுறை பயிரை அவதானித்து விசிறுவதன் மூலம் பீடைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

இந்த நாசினி கோவாப் பயிருக்கு மட்டுமல்ல ஏனைய பயிர்களுக்கும் உகந்தது. இந்த நாசினி ஆபத்தானது அல்ல. ஆகவே அச்சமின்றிப் பயன்படுத்தலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டில் குற்றங்கள் அதிகரித்துள்ளன

## குற்றஞ்சாட்டுகிறார் ஜயலத் எம்.பி.

கொழும்பு,ஓக.31

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் நாட்டில் குற்றங்கள் அதிகரித்துள்ளன எனக் குற்றஞ்சாட்டினார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், சட்டமும் ஒழுங்கும் நாட்டில் சீர்கெட்டுப் போயுள்ளன. சுதந்திரமாக அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அரசியல் காரணங்களுக்காகவே பலப்படுத்தப்படுகின்றன.

அத்தோடு, அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் ஒன்றைச் சொல்வார். அதற்கு முற்றும் மாற்றமாக - தலைகீழாக - மற்றோர் அமைச்சர் கருத்து வெளியிடுவார்.

நிதி அமைச்சர் சரத் அமுனுகம, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பார். அதேவேளை, மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தனியார் மயமாக்குவதில்லை என்று தலைகீழாகப் பேசுவார். ஒரே அமைச்சரவையில் உள்ளவர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை.

இப்படித்தான், நிதியமைச்சர் 70 வீதம் அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு, தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்களித்ததுபோல இப்போது வழங்கமுடியாது என்கிறார். அதற்கு மாறாக, அமைச்சர் லால்காந்த சம்பள அதிகரிப்பு வழங்குவோம் - என்கிறார்.

இதுதான் இன்றைய அரசாங்கத்தின் நிலைமை. குழம்பியுள்ளார்கள், எதைச் சொல்வது? எதைச் சொல்லக்கூடாது என்பதில் கூட ஒருமித்த கருத்தில்லை என்றும தெரிவித்தார் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.(க)

# புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் திருக்கோயிலில் சந்தித்துப் பேச்சு

முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலித்தரப்பினருக்கும் இடையில் கிழக்கில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. திருக்கோயில், தம்பிலுவிலில் நேற்று முன்தினம் மாலை 5மணியளவில் இச்சந்திப்பு நிகழ்ந்தது.

தமிழ் - முஸ்லிம் உறவை கிழக்கில் தொடர்ந்தும் சுமுகமாகப் பேணுவதற்கான வழிமுறைகள பற்றி இதில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இருதரப்பினராலும் ஆக்கபூர்வமாகவும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

அத்தோடு, வரும் பெரும்போகத்தின்போது, தமிழ்ப்பகுதியில் உள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயற்காணிகளில் நெற்செய்கை பண்ணுவது பற்றியும் பேசப்பட்டது.

இது தொடர்பில் ஆராய்வதற்குக் குழுவொன்றை நியமிப்பது என்றும் - மிகவிரைவில் அக்குழு முஸ்லிம்கள், நெற்செய்கையில் ஈடுபடும் சாத்தியம் குறித்துப் பதிலைத் தெரிவிக்கும் என்றும் புலிகள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

புலிகள் தரப்பில் அம்பாறை அரசியல் பொறுப்பாளர் குயிலின்பன், அரசியல் பிரிவுத் துணைப பொறுப்பாளர் சுதா, அறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணன் ஆகியோரும் பங்கேற்றனர்.

முஸ்லிம் பிரதிநிதிகளாக, அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனச் செயலாளர் ஐ.எம்.இப்ராஹிம், சம்மாந்துறைப் பள்ளிவாசல் செயலாளர் ஏ.எம்.ஹபீப் மொஹமத், அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் அப்துல் அஸீஸ், தென் கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் மௌலவி எம்.ஏ.எச். முனாஸ், பொத்துவிலைச சேர்ந்த மௌலவி எம்.ஏ.கரீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.(க-14)

# கைதடி வடிசாலையை வரணியில் இயக்க ஏற்பாடு

சாவகச்சேரி,ஓக.31

தென்மராட்சி பனை, தென்னை வளக்கூட்டுறவுச் சங்கத்தின் கைதடி வடிசாலையை வரணியில் மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வடிசாலைக்கென இயந்திரங்கள் 20லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் -

இந்த இயந்திரங்கள் மூலம் அடுத்த வருடம் பனங்கள் சீசனின் போது உற்பத்தி மேற்கொள்ளப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைதடியில் இயங்கிய வடிசாலை அப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பலத்த சேதம் அடைந்ததுடன் அங்கு பயன்படுத்தப்பட்ட சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் சேதமடைந்தன.

இந்த நிலையத்தையே தற்போது வரணியில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக்த் தெரிவிக்கப்பட்டது.(எ-31)

20% சிறப்பு கழிவு
யாழ்ப்பாணத்தில்
M.M.I.C
வானொலி, தொலைக்காட்சி பத்திரிகை ஊடகங்கள்சார் தபால்மூல கற்கை நெறி
DIPLOMA IN MASSMEDIA
பயிற்சி காலம் 6 மாதம்
கட்டணம் 6900 5200/=
இச்சலுகை 31.08.2004 வரை மட்டும்
இக்கற்கை நெறியை மேற்கொண்டு Dip.in.m.m. (Sri Lanka)சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்.
15, சிறாம்பியடி ஒழுங்கை ஸ்ரான்லி வீதி மணியம்ஸ் பில்டிங் யாழ்ப்பாணம். T.P 0777 316258

## ஈச்சமோட்டையில் வாக்காளர் பதிவு

அரியாலை,ஓக.31

யாழ்ஈச்சமோட்டை கிராமசேவையாளர் பிரிவில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களை வாக்காளர்களாகப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் இடம் பெற்றுவருகின்றன.

இதுவரை வாக்காளர்களாகப் பதிவு செய்யாத 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கிராம சேவையாளர் ம.சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

(எ-17)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண மாவட்டம்,தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று, 'சாமிச்சாட்டிக்குடியிருப்பும் ஐயங்கன் வளவும்' ஆதனப் பெயர் கொண்டதும் நிலப்பரப்பு 5 குளி 00.01ஆம் கொண்ட ஆதனம் உடன் விற்பனைக்கு உண்டு. சாவகச்சேரி தபாற்கந்தோருக்கு நேர் முன்னால் அமைந்துள்ளது.

தொடர்பு: தொலைபேசி எண்.
(35921) 077-3053011 (16-15-21)

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
15
06
1919



மறைவு
16
08
2004

### திருமதி மங்கையர்க்கரசி நடராசா .

வெண்பா

பாலுடன் தேனினைப் பரிவுடன் ஊட்டினை
பண்பினால் கல்வியால் பார்புகழ வைத்தனை - நாம்
பாலூட்ட ஏனோ கணத்தினில் பிரிந்தனை
பால்போலுன் சிரிப்பினைப் பாரினில் நாம் காண்பதெப்போ?

இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்ட எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தியறிந்து நேரில் வந்தும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும், உதவிகள் பல செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இன்று (31.08.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வீட்டுக் கிரியையும் சபிண்டீகரணமும் நடைபெறும்.*

*இக்கிரியைகளிலும் அதன் பின் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

அன்னாரின் பிரிவால் துயருறும்:
கருணை ஆனந்தன் (மகள்),
புனிதவதியார் (மகள்)

செட்டிய குறிச்சி,
பண்டத்தரிப்பு.
T.P.: 077 - 6367431, 011 - 2555108

(சி 37294) (16-15-21)

# கைதடி சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா

கைதடி சமுர்த்தி வங்கிச் சங்கம் கைதடி தென்மராட்சி

## 31.08.2004

"தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கைதடி வலயந்தனில்"
"பதினைந்து கிராமசேவகர் கூறுகளை தன்னகத்தே கொண்டு விளங்கிடுமே"
"உயர் பாதுகாப்பு வலயத்திலோ இரு கூறுகள் உள்ளதாக்கப்பட்டு விளங்குதுவே"
"இதர பதின்மூன்று கூறுகளின் கீழ் வாழ்ந்திடும் கிராமிய மக்களின்"
"தன்னிகரில்லா தலைவனாக சமுர்த்தி வங்கியும் இலங்கி முதல் வருடமும் கனிந்ததுவே"
"பொங்கும் பூம்புனல் போல் விளங்கும் சமுர்த்தி வங்கியின் வாடிக்கையாளர்களோ அனந்தம் அனந்தம்"
"சமுர்த்தி வங்கியின் கன்னிவருட பூர்த்தி விழாவிலே புளகாங்கிதம் கொள்வோரோ பலர்"
"ஐந்தாயிரம் குடும்ப விளக்குகள் சமுர்த்தி வங்கியில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றதுவே"
"சமுர்த்தி வங்கியாலோ பல லட்சம் ரூபாய்களை தன் முதலீட்டு ஆடையாக அணிகலன் கொண்டிருக்கின்றாளே"
"கைதடி வலயந்தனில் வந்தாரை வரவேற்கும் சமுர்த்தியாளின் சாதனைகளை மதித்திடுவோம்"
"சமுர்த்தி வங்கியாளின் முதலீட்டு மேகளையால் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் உழைக்கும் கரங்களுக்கு உரமாகிவிட்டாளே"
"கடன்திட்டங்களினால் உற்பத்திகளங்கள் உன்னத வளங்களாக்க வங்கியின் பூஜை மலர்ந்ததுவே"
"பொன்கொழிக்கும் எமது திருநாட்டினிலே வறுமை புகுந்திருக்கின்றது இவ் வீட்டினிலே"
"வறுமைத்தாண்டவத்தில் உந்தப்பட்டோருக்கு சமுர்த்தி வங்கியால் கரம்கொடுத்து உதவுகிறாளே"
"கன்னி வருடம் கனிந்ததுவே உற்பத்திக் காதல் பெருகியதுவே உன்னத சாதனைகள் மல்கியதுவே"
"கைதடி வலயந்தனில் கைகொடுக்கும் வங்கியால் கலங்கரை விளக்குப் போல் திகழ்கின்றாளே"
"அன்னவளின் கன்னி வருட பூர்த்தி விழாவில் யாவரும் சங்கமமாகி விடுவோம்"
"சமுர்த்தி வங்கியாளின் கனவுகளை நனவாக்க நிர்வகிக்கும் செம்மல்களோ பலர் உளர்"
"அவ்வகை ஏந்தல்களை சமுர்த்தி வங்கியாளே கோடிட்டுக் காட்டுகின்றாள்"
"சமுர்த்தி அதிகார சபையின் வடகிழக்குப் பெருந்தோட்டப் பணிப்பாளர் அவர்களுக்கும்"
"இதர நிலையில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செம்மலுக்கும்"
"யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ஏந்தலுக்கும் தென்மராட்சிப் பிரதேச பிரதி சமுர்த்திப் பணிப்பாளர் பெருந்தகையாளருக்கும்"
"தென்மராட்சி பிரதேச மகாசங்க முகாமையாளர், தலைமையக முகாமையாளர் என மதிக்கப்படுவோருக்கும்"
"கைதடி வலய வங்கி முகாமையாளர், வங்கி வலய உத்தியோகத்தர்கள் என பதவியில் உறைந்திருக்கும் சகபாடிகளுக்கும்"
"சமுர்த்தி வங்கியாளின் நெஞ்சார்ந்த வணக்கங்கள் கூறிவரும் வழிதனில்"
"நன்றிகளையும் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் வாரிவழங்கும் இதய சுத்தியோ கைதடி சமுர்த்தி வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபையினரும் பயனாளிகளும் கைதடி வர்த்தக சங்கத்தினருமெனப் பூமழை பொழிகின்றனரே"
"உற்பத்தி மல்கிட உள்ளங்கள் மல்கிடும். உழைக்கும் கரங்கள் உழைப்பால் உயர்ந்தவர்களே என்ற புதுமொழியோடு சமுர்த்தி வங்கியாளின் முதலாம் ஆண்டு கனிவு நிறைவோடு மென்மேலும் பல்லாண்டுகள் வாழவும் நீடிக்கவும் பதமாக வாழ்த்துகின்றோம்."

### விளம்பர அனுசரணை:

திலக்சன் பல்பொருள் வாணிப நிலையம், கைதடி தெற்கு, கைதடி.

ஆரியபவான் சைவ உணவகம், கைதடி சந்தி, கைதடி.

கஜன் ஒடியோ வீடியோ சென்ரர், கைதடி சந்தி, கைதடி. கிளை: மானிப்பாய் வீதி, உடுவில்.

கைதடி வர்த்தக நிலையம், கைதடி சந்தி, கைதடி.

முருகன் ஸ்ரோர்ஸ், கேரதீவு வீதி, நாவற்குழி.

வீடியோ ரங்கன், கைதடி வடக்கு, கைதடி.

குமரன் பல்பொருள் வாணிபம், கைதடி சந்தி, கைதடி.

தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் வீதி, கைதடி.

நியூ லீலாவதி பல்பொருள் வாணிபம், கைதடி சந்தி, கைதடி.

கதிர்வேலவன் களஞ்சியம், கதிர்வேலவன் அரிசிஆலை, கைதடி சந்தி, கைதடி.

ரட்ணா சலூன், மானிப்பாய் வீதி, கைதடி சந்தி, கைதடி.

(C/37316)x (15-42-16-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரதான வீதியைப் போராளிகள் கடந்தவேளை

# மியாங்குளத்தில் சனியன்று படையினர் - புலிகள் முறுகல்

மட்டக்களப்பு,ஓக.31

மட்டக்களப்பு மாவட்டத்தில் மியாங்குளம் பகுதியில் கடந்த சனியன்று காலை விடுதலைப் புலிப்போராளிகளுககும், படையினருக்கும் இடையே பெரும் முறுகல்நிலை ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளின் போராளிகள் சில்ர் ரி-56 ரக 5 துப்பாக்கிகளுடன் சீருடை தரித்த நிலையில், வாகரையில் உள்ள தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தங்களின் மற்றொரு கட்டுப்பாட்டுப் பகுதியான தரவைப்பகுதிக்கு - வாழைச்சேனை, பொலநறுவவீதி ஊடாகச் செல்ல முயன்றவேளை இந்த முறுகல் ஏற்பட்டது.

மியாங்குளம் என்ற இடத்தில் பிரதான வீதிப்பகுதி மட்டும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. போராளிகள் அந்த வீதியையே கடக்க முயன்றனர்.

இந்தப் பகுதியூடாகக் கடக்க முயலவது யுத்தநிறுத்த மீறல் எனத் தெரிவித்தனர் படையினர். இதனையடுத்து, போராளிகளுக்கும் படையினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த விவகாரத்தை உடனடியாக உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரத் தாங்கள் முயற்சித்த சமயத்தில் அந்தப் போராளிகள் வீதியைக் கடந்து தரவைப் பகுதிக்குச் சென்றுவிட்டனர் என்று படைத்தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பாகப் படைத்தரப்பினர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புககுழுவுக்கு முறையிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

-(ஐ-3)

# நாடுமுழுவதும் குற்றச்செயல்களை ஓரேயடியாகத் தடுப்பது சாத்தியமல்ல

### பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா

கொழும்பு,ஓக.31

நாடு முழுவதும் இடம்பெறுகின்ற குற்றச்செயல்களை முற்றாகத்தடுத்து நிறுத்துவதென்பது நடைமுறைக்குச் சாத்தியப்படக்கூடியதொன்றல்ல.

- இவ்வாறு தெரிவிக்கிறார் பொலீஸ்மா அதிபர் இந்திர டி சில்வா.

இராணுவ ஒற்றர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகின்ற தாக்குதல்களைத் தடுப்பது என்பது பாதுகாப்பைப் பலப்படுத்துவதால் மட்டும் சாதித்து விடக்கூடியதல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேறுகின்ற மற்றும் அந்தப் பிரதேசங்களுக்குச் செல்கின்றவர்கள் யார் என அடையாளம் காண்பதில் சிரமங்கள் எற்பட்டுள்ளன. இதன் காரணமாக ஆள்களை அடையாளம் காணும் பொருட்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையில் சில ஷரத்துக்களை உள்ளடக்குவது பொருத்தமாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து கருணா விலக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தகைய நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

எனவே. அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பேச்சுக்களை நடத்தித் தமது யோசனைகளை யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்வது இன்றைய காலத்தின் தேவையாகும்.

இதனைக் குறுகிய காலத்தில் செய்யமுடியாவிட்டாலும் அது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துவது அவசியம்.

- இவ்வாறு பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

(ஐ-13)

## மரக்கன்றுகளை அகற்றும் விஷமிகள்

அரியாலை,ஓக.31

ஈச்சமோட்டை, வண்ணான்குளத்தினூடாகச் செல்லும் வடிகாலின் கரையோரப் பக்கமாக நடுகைசெய்யப்பட்டுள்ள நிழல்தரும் ஆலமரக்கன்றுகள் இரவோடு இரவாக அகற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில விஷமிகள் வேண்டும் என்றே இந்த நாசகார வேலையில் ஈடுபடுவதாகவும் -

மரக்கன்றுகளின் பாதுகாப்புக்கென வைக்கப்பட்ட கம்பிக்கூடுகளையும் திருடிச் சென்றிருப்பதாகவும் - கூறப்பட்டது. (எ-17)

## கிழக்குப் பல்கலையில் வெளிவாரி மாணவர் பதிவுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஓக.31

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2003 - 2004 கல்வி யாண்டுக்கான விஞ்ஞான பாடத்திற்கு வெளிவாரி மாணவர்களாகப் பதிவுசெய்ய விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயிரியல் விஞ்ஞானம், பெளதிக விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன. பாடநெறிகள் ஆங்கில மொழி மூலமே நடத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பம் அடங்கிய தபால் உறையின் இடதுபக்க மேல் மூலை யில் கற்கவிரும்பும் பாடநெறியைக் குறிப்பிட்டு ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (எ-201)


## இன்று நல்லைக்கந்தன் ஆலயத்தில் பதினோராந் திருவிழா

பகல் திருவிழா காலை 10.30மணிக்கு

இரவுத் திருவிழா மாலை 5.30மணிக்கு

வள்ளி வேல் தெய்வானை வீதிவலம்

அரஹர சிவசிவ ஆறுமுகா!

வரமருள் வடிவேலா! குருபரனே!!

விளம்பர அனுசரணை:-



### யாழ்.நகரில் நவீன திரைச்சிலை (Curtain)



நவீனமுறையில் உங்கள் இல்லங்கள் காரியாலயங்கள், வைத்தியசாலைகள், உல்லாச விடுதிகள், கண்ணி நிலையங்கள் ஆகியவற்றுக்கும் மற்றும் பிறந்தநாள் வைபவங்கள், புதுமனைப் பிரவேசம் மற்றும் உங்கள் இல்ல மங்களகரமான நிகழ்வுகளுக்கும் மனதைக் கவரும் திரை சீலைகள் நேரடியாக வந்து உங்கள் விருப்பப்படி கைதேர்ந்த தொழிலாளர்கள் மூலம் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

உடன் தொடர்புக்கு :-
077-3013239, 0777 563946
011 - 2727218


## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,ஓக.31

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தினர் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு மேரிசறோஜா ஜஸ்டினின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியதாரர்களாக வயலின் குமுதினி உருத்திரகுமாரன், மிருதங்கம் எஸ்.துரைராசா, கெஞ்சிரா பி.சியாமகிருஷ்ணா ஆகியோர் பங்கேற்பார்கள்.

(8-13)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஓக.31

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவையொட்டி இந்துகலாசார அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் 7 மணிக்கு நடத்திவரும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று மாவை சிவநாதன் பட்டிமன்றக்குழுவினரின் "வாழ்க்கையில் சைவம்" எனும் தலைப்பில் சுழலும் சொற்போர் இடம்பெறும்.

இதில் தலைவராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் மற்றும் சைவப்புலவர் என்.ரி. தரன், செல்வநேசன், கவிதரன், ச.நவநீதன், த.பிரதீப், க.சுகாஷ் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

(8-13)

◆ ◆ ◆

நல்லூர் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்குவீதியிலுள்ள ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும் கம்பராமாயணத் தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா 'தாடகை வதம்' [illegible]

(8-13)

## நல்லூர் முருகன்

இராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

நல்லையில் வாசா ஞானப்பிரகாசா

அனுப்பல்லவி

நல்லதெய்வானை வள்ளியம்மை சமேதா
நரர்சுரர் பணி ஞானபண்டி தாபரா
(நல்லை)

சரணம்




நான் உன்னை நம்பினேன் நல்குரவு பிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து ஆளுவாய்
தேனுந்து வேங்கையாய்த் தினைப்புனம்
நின்றனை
ஸ்ரீராமன் மருகனே முருகனே கிருபாகரா.
(நல்லை)

- யோகர்சுவாமிகள்.

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பிதழ்

### (11 ஆம் திருவிழா)



## முடிவொன்றைத் தா

அடியார்கள் உந்தன் அருட்காட்சி தேடி வர வருவாய்
வடிவான வள்ளி வலம் தெய்வ யானை இடமிருப்பாள்
கொடிதான சிந்தை யுடையோரைக் கொன்று
குறையழித்தாய்
முடிவொன்றைத் தந்து முறையாய் மண்ணாள அருளுகவே.

- சிற்பி.

## மண்ணின் வாசனை அருள்தானே

நல்லூர் மண்ணிற் ஈடாக
நல்ல மண்தான் ஏதுண்டு
சொல்லும் முனிவர் யோகிகளும்
தொழுது நடந்த மண்தானே
என்ன புண்ணியம் நாமின்று
இதிலே நடந்து திரிவதற்கு
மண்ணின் வாசனை அருள்தானே
மணக்கும் இடந்தான் நல்லூரே.

- வ.யோகானந்தசிவம்.

## கவலைகளே கரையும்

சிந்தை சிறந் தென்றும்
சித்தத் திலே யுறையும்
கந்தன் கழல் பரவ
கவலை களே கரையும்!

அழகனாம் முருகன் தன்னை
அளவிட முடியா தெம்மால்
இளகிய இதய மென்றும்
இங்கித மீயு மன்றோ!

கைமலர் தம்மா லென்றும்
கந்தனைக் கூப்பு வோர்க்கு
செய்தொழில் அனைத்தும் வாழ்வில்
செழித்துநன் றோங்கு மன்றோ!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## இருளகற்றும் ஒளிக்குமரா!

பல்லவி

தீராத வினை தீர்க்கும் திருக்குமரன் – தன்
திருவருளால் இருளகற்றும் ஒளிக்குமரன்
ஏராளம் பக்தர் தொழும் கந்தனவன் – நல்லூர்
எனும்பதியில் இருந்தருளும் மைந்தனவன்

சரணங்கள்

நீர்வற்றிப் போனதைய்யா விழியிரண்டிலும் – முருகா
நீயருளும் போதில்மட்டும் மனம்குளிர்ந்திடும்
கூர்மழுங்கிப் போச்சோ உன்றன் வேல்முனை – நல்லைக்
குமரா எமக்கு உம்மைவிட்டால் யாருதுணை

ஓடோடி வாசல்வந்தோம் உன்னைக் காணவே – எங்கள்
உள்ளத்துள்ளே உள்ளதெல்லாம் சொன்னோம் உரைவே
கோடிமக்கள் குறைதீர்ந்த புகழ்கொஞ்சமா – உன்றன்
கோபுரம்போல் எம்வாழ்வும் உயர்ந்தோங்குமா.

வேலணையூர சுரேஸ்.

## நல்லருள் தருவாய் முருகா

மயில் மீது ஏறியே
மாஞால வலம் வந்து
மாங்கனி கேட்ட முருகா!

கையிலே வேல் கொண்டு
கொடுஞ் சமர் புரிந்தே
சூரனைக் கொன்ற முருகா!

உயர் மாமலை ஏறியே
ஆண்டியாய் நின்று தத்துவ
ஞானக் கனியான முருகா!

தையலர் வள்ளிதெய் வானைசூழ
நல்லைத் திருவீதி வந்தே
நல்லருள் தருவாய் முருகா!

அரியாலையூர சி.சிவதாசன்

## அருளாளா அருள்கவே!

அழகுடையோனே அருளுடையோனே
ஆனந்தப் பொருள் ஆன முதல்வனே
இளையவனே இளம் அழகுடைப் பொருளே
ஈந்தருள் செய்குவாய் நல்லூர்க் குகனே

உருகி அழைக்கிறோம் முருகா நிதம் நிதம்
ஊனமுற்றேங்கித் தவித்திடல் கூடுமோ?
எங்கும் உறைந்திடும் சிவகுருவே உததருள்
ஏக்கம் தவிர்த்திட ஓடியே வாராய்.

ஐயனே அப்பனே தண்ணருள் நம்பியே
ஒருதிரு முருகனே ஆறிரு புயத்தனே
ஓங்கார சோதியே வள்ளி மணாளனே
ஒளவைக்கருளிய அருளாளா அருள்கவே!


செல்வி மணிமேகலை குமாரசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் வாண்மை....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரம் கற்றவர்கள் ஆரம்பவகுப்புக்கு கற்பிக்கும் நிலை காணப்படுகிறது. இவர்களுக்கு ஒழுங்கமைந்த முறையிலான பயிற்சி வழங்குதல் இன்றியமையாததாகின்றது. இச்செயற்பாட்டை ஆசிரிய கலாசாலைகள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றதை காணமுடிகிறது.




தேசிய ரீதியில் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திச் செயற்றிட்டத்தில் பதினேழு தேசிய கல்வியியற் கல்லூரிகள், மூன்று ஆசிரிய கல்வி நிறுவனங்கள், நூறு ஆசிரிய மையங்கள் செயற்பட்டு வருவதைக் காணமுடிகிறது. அத்துடன் கல்வி அமைச்சு, திறந்த பல்கலைக்கழகம், தொலைக்கல்வி நிறுவனம், தேசிய கல்வி நிறுவனம், பல்கலைக்கழகங்கள் ஆசிரியர்களைத் தரமுயர்த்துதல், விரிவாக்குதல், மீள்பயிற்சி அளித்தல், சேவைக்காலப் பயிற்சி, புத்தாக்கப்பயிற்சி, வதிவிடப்பயிற்சி என்ற அடிப்படையில் செயற்படுத்தி வருவதை


திட்டத்தை விருத்தி செய்ய விளைதல் அவசியம் எனவும் வலியுறுத்தப்படுகிறது.

**தீர்வுகள்**

ஆரம்ப ஆசிரியர்களின் தேவையை உணர்ந்து ஆரம்ப ஆசிரிய வள ஆளணியினரை விருத்தி செய்வது வாண்மைத்துவ நிறுவனங்களின் பொறுபபாகும். அத்துடன் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் தொடர்ச்சியாக நிலைத்து நிற்கக்கூடிய செயற்திட்டங்களை ஒழுங்கமைத்தலும் முக்கியமாகிறது.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் தேவையை உணர்ந்து அவர்களுக்கு உரிய பயிற்சியை நன்கு திட்டமிட்டு வழங்குவதனூடாகவும், ஊக்குவிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்து

**யாழ்ப்பாண மாவட்டம்**




வதனூடாகவும், ஆரம்பக்கல்வித் துறையில் கல்விமாணிப் பட்டப்படிப்பு வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதன் ஊடாகவும், கஷ்டப் பிரதேச ஆரம்ப பாடசாலையில் சேவை செய்வோருக்கு கஷ்டப பிரதேச ஊக்குவிப்பு வழங்குவதன் மூலமும்,

(தேசிய அடிப்படையில்) (அட்டவணை - 06)

| ஆண்டு | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப ஆசிரியர்கள் | 64574 | 67772 | 66970 | 66168 | 65366 | 64565 | 62536 | 60507 | 59960 | 58885 |

(மூலம் - இலங்கையில் ஆரம்பக்கல்விச் சீர்திருத்தம்)

காணமுடிகிறது. ஆரம்ப ஆசிரியர்களின்வாண்மை விருத்திககாக பயிற்சி நிறுவனங்களின் ஆற்றல்களை மேம்படுத்தல், ஆசிரிய கல்வி நிறுவனங்களின் வசதியை விரிவாக்குதல், ஆசிரியா கல்வியாளர் தொழில்சார்விருத்தி என்ற அடிப்படையில் மாற்றம்பெற்றுச்செயற்படுதலின் தேவை உணரப்பட்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் ஆரம்ப ஆசிரியர் நியமனங்களை வழங்குதல் மூலமும், ஆரம்பக் கல்வியில் ஈடுபாடும், விருப்புணர்வும், அர்ப்பணிப்புள்ள மனநிலை தோன்றுவதன் ஊடாகவும், அரசியல ரீதியானதும் பிரதேச அடிப்படையிலான பாகுபாடு இன்றிய ஆசிரியர் நியமனம் இடம்பெறுதல ஊடாகவும், ஆரம்பக் கல்வித்துறையில் அபி

(அட்டவணை - 04)

| பாடத்துறைகள் | கடமையாற்றுவோர் | கடமையாற்ற அனுமதிக்கப்பட்டோர் | தேவைக்குஅதிகம்(+) பற்றாக்குறை ( - ) |
|---|---|---|---|
| ஆரம்பக்கல்வி(பொது) (1 - 5 தரங்கள்) | 12519 | 16224 | -3705 |
| ஆங்கிலம் (3 - 5 தரங்கள்) | 1111 | 3108 | -1997 |

(மூலம் - தினக்குரல் 25.04.2004)

மேலும் ஆசிரியர் மையங்கள் கல்விசார் ஆராய்ச்சி மையங்களாக செயற்படுதலும், ஆசிரிய கல்வி நிறுவனமும், ஆசிரிய மையமும தமது மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு, அவைக்கேற்பத் தமது பாடவிதான விடயங்களை வடிவமைத்து சுய ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்

விருத்தி என்ற முழுமையான வடிவத்தைக் காண அதிக வாய்ப்பு உண்டாவதுடன், வடக்கு - கிழக்கு மாகாணத்திலும், யாழ்ப்பாணத்திலும் நிலவும் ஆரம்ப ஆசிரியர் வளப்பற்றாக் குறையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் முனைப்பான செயற்பாடுகளாகவும் அமையும். ☆

(மாகாண அடிப்படையில்) (அட்டவணை - 07)

| மாகாணம் | 2001 தேவைப்படும் ஆரம்ப ஆசிரியர்கள் | 2003 தேவைப்படும் ஆரம்ப ஆசிரியர்கள் |
|---|---|---|
| வடக்கு | 4304 | 3980 |
| கிழக்கு | 6380 | 5889 |

(மூலம் - கல்வி அமைச்சு அறிக்கை - 2003)

## தேசிய மட்டப் போட்டி கொழும்பில்

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள 11ஆவது விளையாட்டுப் போட்டி செம்ரெம்பர், ஒக்ரோபா மாதங்களில் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது.

முதலாம் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 4ஆம், 5ஆம் 6ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன. இதில் வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், எல்லே, சதுரங்கம், குத்துச் சண்டை, உடற பயிற்சிப் போட்டி, கராத்தே, நீச்சல், மேசைப்பந்து பட்மின்ரன் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இரண்டாம் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ன. இதில் கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், ஹொக்கி, டென்னிஸ், கிரிக்கெட், ஜிம்னாஸ்ரிக், கபடி, சைக்கிளோட்டம் ஆகியன நடைபெறவுள்ளன.

மூன்றாம் கட்டப் போட்டிகள் எதிர்வரும 30ஆம் திகதி தொடககம் ஒக்ரோபர் 3ஆம் திகதி வரை சுகந்த தாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. இதில் அனைத்துப் பிரிவினருக்குமான மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப போட்டிகளில மாகாணப் போட்டிகளில வெற்றியீட்டிய பாடசாலைகள் பங்கு பற்றவுள்ளன. (4-405)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.31

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ பிற்பகல் 3.30 மணி - சென் சேவியர் வி.க. 'பி' அணி எதிர் கரணவாய் மத்தி இளைஞர் வி.க. அணி.

☆ மாலை 4.30 மணி - வல்வை ஆதி சக்தி வி.க. 'பி' அணி எதிர் அல்வாய் விக்கிரமன்ஸ் வி.க. அணி. (எ-5)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.உதைபந்தாட்டச்சங்கம், தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில இன்று செவ்வாய் கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களில பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ பிற்பகல் 3.30 மணி - அச்செழு வளர்மதி வி.க. எதிர் இளவாலை யங் ஹென்றீஸ் வி.க.

☆ மாலை 4.30 மணி - [illegible] வி.க. எதிர் நவிண்டில் கலைமதி வி.க. (எ-5)



# கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
## 12 ஆவது தின அலங்கார உற்சவம்
## 31.08.2004

முருகன் அடியார்களே!

மேற்படி ஆலயத்தில் 31.08.2004 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு எம்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து விசேட நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

மாலை 6.30 - 8.30 மணி வரை புல்லாங்குழல் கச்சேரி கு.நக்கீரன குழுவினர்
இரவு 8.30 - மணிக்கு நாதஸ்வர, தவில் கச்சேரி
மறைந்த தவில்மேதை இணுவிலூர் N.R.சின்னராஜாவின் புதல்வன் N.R.S.ரவீந்திரன் உடன் இணைந்து K. காண்டீபன் - தவில்
நாதஸ்வர இன்குழல் வேந்தன் A.முருகானந்தம் இந்திய நாதஸ்வர இளந்தென்றல் V.இளையராஜா (இடும்பாவனம்), நாதஸ்வர இசைவேந்தன் S.பாலமுருகன், K.நாகதீபன் தவில் இளம்சுடர் ஒளிகள் N.கணேசன், S.செந்தில்குமரன் இவர்களின் நாதஸ்வர தவில் கச்சேரியும் இடம்பெறும்.
நள்ளிரவு 12.30 மணிக்கு ஈழத்து புகழ் ராகம்ஸ் இசைக்குழுவுடன் ஈழமண்ணின் புகழ்பூத்த S.G.சாந்தன், இசைஞானமணி N.ரகுநாதன் இணைந்து வழங்கும் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.
ஒலி அமைப்பு: கண்ணா சவுண்ட் - திருநெல்வேலி
ஒளி அமைப்பு: கண்ணா லைற் - கொக்குவில்

அடியார்கள் யாவரும் வருகைதந்து அலங்கார உற்சவம் சிறப்புற உங்கள் ஆதரவை நல்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில். மஞ்சவனப்பதி இளைஞர்கள்.

விளம்பர அனுசரணை:

**செல்வி நகையகம்,** கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(35949)(34)

**செந்தூரன் [illegible]** கொக்குவில் சந்தி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெட்சணாமூர்த்தி சிலை திருட்டு

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலிலிருந்து 24.08.2004 செவ்வாய்க்கிழமையிரவு 2¾ அடி உயரமும் 1¼ அடி அகலமும் சுமார் 40கிலோ எடையுமுள்ள பலலட்ச ரூபா பெறுமதி வாய்ந்த தெட்சணாமூர்த்தி ஐம்பொன் சிலை திருட்டுப்போய்விட்டது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

இது பற்றித் தகவல் தருபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும்.

இத்திருட்டுச் சம்பவம் பற்றித் தமிழீழ அரசியல்த் துறையினருக்கும் பொலீஸாருக்கும் அறிவித்துள்ளோம். இச்சிலையை எவரும் வாங்க வேண்டாமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

செல்லப்பா நடராசா, தலைவர். இ.இ.இரத்தினதாசன், செயலாளர்.
பரிபாலன சபையினர்,
(35941) நெட்டிலிப்பாய் பிள்ளையார்கோயில், கோண்டாவில். (21-39-15)

## பத்தாவது ஆண்டு இதய அஞ்சலி

தோற்றம் 10 - 11 - 1942



மறைவு 22 - 08 - 1994

அமரர் **தம்பிராசா சிவலிங்கம்**

ஆண்டுகள் பத்து ஓடிப்போனாலும்
அகலாது உங்கள் அன்பு முகம் மட்டும்
ஈண்டு உம்மை நினைந்தே
இப்பூவுலகில் நாம் வாழ்கின்றோம்.

அன்பு மனைவி,
அன்பு மகள், மகன்,
உறவினர்கள், நண்பர்கள்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான். (35947)(39-15-21)

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

ஆ.செல்வராசா
பளை பொறுப்பு வைத்திய அதிகாரி
திருமதி கி.செல்வராசா அவர்களின் அன்புக் கணவர்

**ஆ.செல்வராசா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(35946)(42) பளை வைத்தியசாலை ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சிவகுமாரன்

யாழ்ப்பாணம், அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு ஆரையம்பதி முதலாம் குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவகுமாரன் 24.08.2004 அகால மரணமானார்.

அன்னார் திருமதி சிவகுமாரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு. திருமதி கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும் அனுஷா (விவசாயபீடம், கிழக்கு பல்கலைக்கழகம்), தர்ஷி (கணிய அளவையியல், மொரட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான அதிபர் சுப்ரமணியம் - சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும சிவபாத விருதயர் (மாவட்ட முகாமையாளர், மக்கள் வங்கி,யாழ்ப்பாணம்), திருமதி சிவஞான அம்பிகை (ஓய்வுபெற்ற லிகிதர், கல்வி அலுவலகம், மட்டக்களப்பு), சிவகடாட்சம் (நிதி உதவியாளர், யாழ்.வலயக் கல்வி அலுவலகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் திருமதி பிறேமலதா, முருகேசப்பிள்ளை (இலங்கை தூதரகம்; சவூதி அரேபியா), பத்மாசனி, சிவநேசகுமாரி (கனடா), சிவலோகமூர்த்தி (தொலைத்தொடர்பு இலத்திரனியல் பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் மைத்துனரும் துரைராஜசிங்கம் (கனடா), விஜயலட்சுமி (சிங்கப்பூர்) ஆகியோரின் சகோதரரும் நிருத்தன், சம்பந்தன், அபிராமி, கற்கதாரணி, பிரபா, வாகினி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் அனிநதிதை, நக்கீரன் ஸ்ரீகீசன் (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும் ஐஸ்வர்யா (கனடா), வித்யவாணி (கனடா) ஆகியோரின பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.08.2004 வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் ஆரையம்பதி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

*பத்திரகாளிகோயில் வீதி,*
*தாவடி,*
*கொக்குவில்.*

தகவல்:
க.சிவபாதவிருதயர், க.சிவகடாட்சம் (சகோதரர்கள்).

(35951)(42-21-15)

## சுப்பிரமணியம் கந்தையா

யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு, 35/14, வாலையம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்தியர் சுப்பிரமணியம் கந்தையா 29.08.2004 ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூரில் சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி தங்கச்சியம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருமதி ம.பூரணம், சு.கார்த்திகேசு ஆகியோரின அன்புச் சகோதரனும் குமாரசாமி, திருமதி கனகம்மா இராமநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி இராஜேஸ்வரி, காலஞ்சென்ற க.இராமநாதன் ஆகியோரின் மாமனாரும் தனஞ்சயன், இராதிகா, பரமேந்திரன், அரவிந்தன், குலதயேந்திரன் சாந்தி, யசோதா, தயாளினி ஆகியோரின் பேரனும். சாரங்கா, பிரியங்கா, அபர்ணிகா, திவ்வியா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.08.2004) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் சிங்கப்பூரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:-065-91461002

தகவல்:
K.தனஞ்சயன்

(சி-37341)(34-15-21)

ATHENS 2004

# உதயன் ஒலிம்பிக் கோலாகலம்

# கழுத்தில் பதக்கம்... கண்களில் கண்ணீர்...

# விடை பெற்றனர் ஒலிம்பிக் வீரர்கள்

## 35 தங்கங்களுடன் முதலிடத்தைக் கைப்பற்றிக் கொண்டது அமெரிக்கா

பதினேழு நாள்கள் உலகின் கவனத்தை ஈர்த்த எதென்ஸ் ஒலிம்பிக் திருவிழா நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது. கண்கவர் நிகழ்ச்சிகளுடன் கூடிய நிறைவு விழா நிகழ்ச்சியை உலகின் பல பகுதிகளிலும் இருந்து லட்சக்கணக்கானோர் பார்த்து ரசித்தனர்.

கிரீஸ் தலைநகர் எதென்ஸ் நகரில் 28 ஆவது நவீன கால ஒலிம்பிக் போட்டி கடந்த 13ஆம் திகதி பிரமாண்டமாக ஆரம்பமாகியது. 17 நாள்களாக, உலகின் ஒட்டுமொத்தக் கவனமும் எதென்ஸ் நகரில்தான் மையம் கொண்டிருந்தது. மனித உழைப்பின் மகத்துவத்தை உலகிற்கு உணர்த்தும் இந்த அற்புத விளையாட்டுத் திருவிழா, நேற்றுமுன்தினம் நள்ளிரவில் அமர்க்களமாக முடிவுக்கு வந்தது.

ஒலிம்பிக் போட்டிகளைப் பொறுத்தவரை இம்முறை தீவிரவாதிகளின் தாக்குதல் அபாயம் அதிகம் எதிர்பார்க்கப்பட்டது. எப்படிப்பட்ட தாக்குதல் சம்பவங்களையும் முறியடிக்கும் வகையில், கிரீஸ் அரசு பல ஆயிரம் கோடி ரூபாய்களைக் கொட்டிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்தது. ஒலிம்பிக் போட்டிகள் பிறந்த - கிரேக்க மண்ணில் - மீண்டும் இம்முறை போட்டிகள் நடைபெற்றதால் எதிர்பார்ப்புகள் அதிகம் இருந்தன.

சிறிய அசம்பாவிதமும் இன்றி, அருமையாக நடந்து முடிந்தது ஒலிம்பிக். உலகின் பல பகுதிகளில் இருந்தும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் பங்கேற்றனர்.

### பதக்கப் பட்டியல்

[2004 ஒலிம்பிக் முடிவுகளின் முழுமையான பட்டியல்]

| நிலை | நாடு | தங்கம | வெள்ளி | வெண்கலம் | மொத்தம |
|---|---|---|---|---|---|
| 01. | அமெரிக்கா | 35 | 39 | 29 | 103 |
| 02. | சீனா | 32 | 17 | 14 | 63 |
| 03. | ரஷ்யா | 27 | 27 | 38 | 92 |
| 04. | ஆஸ்திரேலியா | 17 | 16 | 16 | 49 |
| 05. | ஜப்பான் | 16 | 09 | 12 | 37 |
| 06. | ஜேர்மனி | 14 | 16 | 18 | 48 |
| 07. | பிரான்ஸ் | 11 | 09 | 13 | 33 |
| 08. | இத்தாலி | 10 | 11 | 11 | 32 |
| 09. | தென்கொரியா | 09 | 12 | 09 | 30 |
| 10. | பிரிட்டன் | 09 | 09 | 12 | 30 |
| 11. | கியூபா | 09 | 07 | 11 | 27 |
| 12. | உக்ரைன் | 09 | 05 | 09 | 23 |
| 13. | ஹங்கேரி | 08 | 06 | 03 | 17 |
| 14. | றொமானியா | 08 | 05 | 06 | 19 |
| 15. | கிரேக்கம் | 06 | 06 | 04 | 16 |
| 16. | நோர்வே | 05 | 00 | 01 | 06 |
| 17. | நெதர்லாந்து | 04 | 09 | 09 | 22 |
| 18. | பிரேஸில் | 04 | 03 | 03 | 10 |
| 19. | சுவீடன் | 04 | 01 | 02 | 07 |
| 20. | ஸ்பெயின் | 03 | 11 | 05 | 19 |
| 21. | கனடா | 03 | 06 | 03 | 12 |
| 22. | துருக்கி | 03 | 03 | 04 | 10 |
| 23. | போலந்து | 03 | 02 | 05 | 10 |
| 24. | நியூஸிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| 25. | தாய்லாந்து | 03 | 01 | 04 | 08 |
| 26. | பெலாறஸ் | 02 | 06 | 07 | 15 |
| 27. | ஒஸ்ரியா | 02 | 04 | 01 | 07 |
| 28. | எதியோப்பியா | 02 | 03 | 02 | 07 |
| 29. | ஈரான் | 02 | 02 | 02 | 06 |
| 29. | ஸ்லோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| 31. | தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| 32. | ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |
| 33. | பல்கேரியா | 02 | 01 | 09 | 12 |
| 34. | ஜமேக்கா | 02 | 01 | 02 | 05 |
| 34. | உஸ்பெகிஸ்தான் | 02 | 01 | 02 | 05 |
| 36. | மொராக்கோ | 02 | 01 | 00 | 03 |
| 37. | டென்மார்க் | 02 | 00 | 06 | 08 |
| 38. | ஆஜென்ரீனா | 02 | 00 | 04 | 06 |
| 39. | சிலி | 02 | 00 | 01 | 03 |
| 40. | கஜகஸ்தான் | 01 | 04 | 03 | 08 |
| 41. | கென்யா | 01 | 04 | 02 | 07 |
| 42. | செக். குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| 43. | தெ. ஆபிரிக்கா | 01 | 03 | 02 | 06 |
| 44. | குரோஷியா | 01 | 02 | 02 | 05 |
| 45. | லிதுவேனியா | 01 | 02 | 00 | 03 |
| 46. | எகிப்து | 01 | 01 | 03 | 05 |
| 46. | சுவிற்ஸர்லாந்து | 01 | 01 | 03 | 05 |
| 48. | இந்தோனேஷியா | 01 | 01 | 02 | 04 |
| 49. | சிம்பாவே | 01 | 01 | 01 | 03 |
| 50. | அஜர்பைஜான் | 01 | 00 | 04 | 05 |
| 51. | பெல்ஜியம் | 01 | 00 | 02 | 03 |
| 52. | பஹாமாஸ் | 01 | 00 | 01 | 02 |
| 52. | இஸ்ரேல் | 01 | 00 | 01 | 02 |
| 54. | கமரூன் | 01 | 00 | 00 | 01 |
| 54. | டொமினிக்கன் குடியரசு | 01 | 00 | 00 | 01 |
| 54. | அயர்லாந்து | 01 | 00 | 00 | 01 |
| 54. | ஐ. அரபுக் குடியரசு | 01 | 04 | 00 | 05 |
| 58. | வட. கொரியா | 00 | 04 | 01 | 05 |
| 59. | லத்வியா | 00 | 04 | 00 | 04 |
| 60. | மெக்ஸிக்கோ | 00 | 03 | 01 | 04 |
| 61. | போர்த்துக்கல் | 00 | 02 | 01 | 03 |
| 62. | பின்லாந்து | 00 | 02 | 00 | 02 |
| 62. | சேர்மொன்ரிநீக்ரோ | 00 | 02 | 00 | 02 |
| 64. | எஸ்லோவேனியா | 00 | 01 | 03 | 04 |
| 65. | எஸ்டோனியா | 00 | 01 | 02 | 03 |
| 66. | ஹொங்ஹொங் | 00 | 01 | 00 | 01 |
| 66. | இந்தியா | 00 | 01 | 00 | 01 |
| 66. | பரகுவே | 00 | 01 | 00 | 01 |
| 69. | நைஜீரியா | 00 | 00 | 02 | 02 |
| 69. | வெனிசுலா | 00 | 00 | 02 | 02 |
| 71. | கொலம்பியா | 00 | 00 | 01 | 01 |
| 71. | எரித்திரியா | 00 | 00 | 01 | 01 |
| 71. | மொங்கோலியா | 00 | 00 | 01 | 01 |
| 71. | சிரியன் குடியரசு | 00 | 00 | 01 | 01 |
| 71. | டிரினிடாட் | 00 | 00 | 01 | 01 |

பல புதியவர்கள் இம்முறை சாகசங்கள் செய்து வியக்கவைத்தனர். பல ஜாம்பவான்கள் ஏமாற்றம் அளித்தனர். முடிவைக் கணிக்க முடியாது, அதுதானே விளையாட்டு....? கடின உழைப்பு, கடுமையான முயற்சி இவற்றை முன்வைத்து திறமை காட்டியவர்கள் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களுடன் உற்சாகமாக கமராக்களுக்கு போஸ் கொடுத்த நிகழ்ச்சிகளை இந்தப் 17 நாள்களாக தொலைக்காட்சிகளில் பார்த்திருந்திருப்பீர்கள்.

வழக்கம் போல பதக்கப்பட்டியலில் இம்முறையும் அமெரிக்கா 34 தங்கங்களுடன் முதலிடம் பிடித்துள்ளது. ஆச்சரியப்படத்தக்க முறையில் சீனா 32 தங்கங்களுடன் இரண்டாம் இடம் பிடித்துள்ளது. ஆசிய நாடுகளான ஜப்பான், இந்தோனேஷியா, அரபு எமிரேட்ஸ் ஆகியவையும் சாதித்துள்ளன. இந்தியாவைப் பொறுத்தவரை மீண்டும் ஒரு ஒலிம்பிக்... மீண்டும் ஒரு ஏமாற்றம். நூறு கோடிக்கும் அதிகமான இந்திய மக்களுக்கு, துப்பாக்கி சுடுதலில் ராஜ்யவர்தான் சிங் ரத்தோர் வாங்கித்தந்த ஒரே ஒரு வெள்ளி மட்டுமே ஆறுதல்.

போர், வன்முறை போன்ற அன்றாட நிகழ்வுகளில் இருந்து 17 நாள்கள் உலகின் கவனத்தைத் திசை திருப்பிய ஒலிம்பிக் போட்டிகளின் கடைசி நிகழ்ச்சியாக மரதன் போட்டி நடத்தப்பட்டது. எதென்ஸ் பிரதான அரங்கில், நேற்றுமுன்தினம் நள்ளிரவில் நிறைவு விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. போட்டிகளில் பங்கேற்ற வீர வீராங்கனைகள், நிர்வாகிகளுக்கு கிரேக்க ஒலிம்பிக் அமைப்பாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

கிரீஸ் ஒலிம்பிக் அமைப்பாளர்களை சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஜாக்வெஸ் ரோக் வெகுவாகப் பாராட்டினார். மிக அமைதியான முறையில், சிறப்பாக இந்தப் போட்டிகளை கிரீஸ் நடத்தி முடித்திருக்கிறது என்று அவர் பாராட்டினார். கிரீஸ் அதிபர், பிரதமர் மற்றும் உலகத் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பின்னர் முழுநிலாவொளியில் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பண்டைய கிரேக்கக் கலாசார நிகழ்வுகள், திருமண வைபவங்களை, கலைநிகழ்ச்சிகள் மூலம் கலைக்குழுவினர் கண்முன் கொண்டுவந்தனர். வாணவேடிக்கைகளுடன் ஒலிம்பிக் கொடி இறக்கப்பட்டது. 2008இல் ஒலிம்பிக் போட்டிகளை பீஜிங் நகர் நடத்துகிறது.

ஒலிம்பிக் கொடி சீன ஒலிம்பிக் சங்க நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

அடுத்த ஒலிம்பிக்கை வரவேற்கும் வகையில் சீனக் குழுவினர் கலைநிகழ்ச்சிகள் நடத்தினர். பதினேழு நாள்களாக வெற்றி, தோல்வி வித்தியாசம் பாராமல் பழகிய பல நாட்டு வீர, வீராங்கனைகள் எதென்ஸ் ஒலிம்பிக்கின் கடைசி வினாடிகளில் கழுத்தில் பதக்கமும், கண்களில் கண்ணீருடனும் விடைபெற்றுக்கொண்டனர்.★




2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை சீனா நடத்தவிருக்கின்றது. அதற்கான உத்தியோகபூர்வ ஆங்கீகாரம் நேற்றுமுன்தினம் சீனாவுக்கு வழங்கப்பட்டது. ஒலிம்பிக் கொடியை சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட பெய்ஜிங் நகரபிதா.





### அந்த மகிழ்ச்சிக் கணங்கள்...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐ.பி.எம்.எஸ்.கணனி நிறுவனத்தில் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் நிறுவன நிர்வாக இயக்குநர் திருமதி ஜெயசோதி விக்னேஸ் தலைமையுரையாற்றுவதையும் நிகழ்வின் பிரதம விருந்தினர் கே.விக்னேஸ் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் : வசந்தன்)

# யமுனா ஏரி புனரமைக்கப்படுமா?

ஈழத்தமிழர் வரலாற்றை வடபுல யாழ்ப்பாணக் குடாநாட்டில் பறைசாற்றி நிற்கும் சான்றாதாரங்கள் பலவாகும். அந்தவகையில் யாழ்ப்பாணத்தின் நல்லூரை இராசதானியாகக் கொண்டு ஆட்சிபுரிந்தவர்கள் ஆரியச் சக்கரவர்த்திகளே என்பதனை இற்றை நாள் வரைக்கும் வெளிப்படுத்தி நிற்கும் நிறுவக வடிவமாக பகர ஏரியான 'யமுனாரி' விளங்கி வருவதனை தமிழ்மக்கள் யாவருமறிவர்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் காலத்தில் தனித் தமிழ்ப்பேரரசு அமைத்து அரசு புரிந்ததை வரலாற்று அறிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். அந்த இராசதானியின் எச்ச சொச்சங்களாக விளங்கும் தொல்லியல் சான்றாதாரமாக விளங்குவன சங்கிலியன் தோப்பு, மந்திரி



மனை, யமுனாரி எனப்படும் யமுனா பகர ஏரி என்பனவாகும். இவை யாவும் தகுந்த பாதுகாப்பும் கவனிப்பும் இன்றி அழிவடைந்து செல்கின்ற நிலைமையை அவதானிக்கமுடிகிறது.

அந்தவகையில் கடந்தவருடம் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று யாழ்.மாநகர சபையினர் மந்திரிமனையை புனரமைப்புச் செய்தனர். எனினும், அதன் பாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமும் வழங்கப்பட்டதாகத்

**விஜயரத்தினம் கனகராசா**
தொல்லியல் கழகம். வடமராட்சி கிழக்கு

தெரியவில்லை.

எனினும், 'யமுனாபகர ஏரி'யும் புனரமைப்புச் செய்யவேண்டிய தேவையும் அவசியமும் அனைவருக்கும் உண்டு. அது தமிழ் மக்களது வரலாற்றுக் கடமையாகும். இதனைக் கருத்திற் கொண்டு அவ் ஏரியினைப் புனரமைப்புச்செய்ய வேணடும். அந்த ஏரி தற்போது சிதைவடைந்து வருகிறது. வேதனை தரும் விடயமொனறும் தற்போது அங்கு நடைபெறுகிறது. அதாவது, விஷமிகள் சிலர்

## மக்கள் மன்றம்

அவ்ஏரிக்குரிய கற்களை எடுத்துவிற்பனை செய்கின்றனர் என்ச் சொல்லப்படுகின்றது.-

இந்தநிலை உடனடியாகக் கவனிக கப்பட்டு ஏரியின் தூய்மையும் புனிதமும் பாதுகாக்கப்பட வேண்டும். அதுவே, வரலாற்று விழிபபுணர்வுக்கும் பெருமைக்கும் இட்டுச்செல்லும். இவ்விடயத்தில் யாழ்ப்பாண மாநகரசபை விரைந்து செயற்படுமா? என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

# சுகாதாரச் சீர்கேடு எனத் தெரிவித்து இரண்டு உணவகங்கள் மூடப்பட்டன

ஆலய உற்சவ தினங்களின் போது ஆலயச் சூழலில் இயங்கிய இரண்டு உணவகங்கள் சுகாதாரச் சீர்கேடு காரணமாகத் தம்மால் மூடப்பட்டன என தமிழீழ சுகாதாரச் சேவைப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம், செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகிய பகுதிகளில் இயங்கிய உணவகங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டபோதே இவ்விரு உணவகங்களும் மூடப்பட்டன என்று சுகாதாரச் சேவையினர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயங்கள் அமைந்துள்ள பகுதியின் பிரதேச சபையின் உரிமம் பெறாது விற்பனை செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள் அங்கு விற்பனை செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன் மனிதப் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்ட உணவுப் பண்டங்கள் உரிமையாளர் சம்மதத்துடன் அழிக்கப்பட்டும் உள்ளன. அத்துடன், கதவுகள், கண்ணாடிகள் இன்றிய வாகனங்களில் இடம்பெற்ற ஐஸ்கிறீம் விற்பனையும் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதேவேளை - ஆலயச் சூழலில் சுகாதார அறிவுறுத்தல்கள் அடங்கிய பதாகைகள் சுகாதாரப் பிரிவினர்களால் ஆங்காங்கே கட்டப்பட்டதுடன், உணவக உரிமையாளர்களுக்குச் சுகாதாரம் தொடர்பான அறிவூட்டல்களும் வழங்கப்பட்டன. (எ-5)


**வீடு வாடகைக்குத் தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமொன்றுக்கு அலுவலகம் அமைப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை. பிரதான வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் அண்மிய இடங்கள் விரும்பத்தக்கவை. விவரங்களுடன் தொடர்புகொள்க.

T.J.தயான்.
T.P.No: 0776358716 (35942)(42-15-16-21)

**தவறிவிட்டது**

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த றொபினசன் ஜெயதாஸ் என்பவரின் TVS சென்றா மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம் யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திற்கும் மத்திய பஸ்நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தாதியர் பயிற்சிப் பாடசாலையில் கொடுத்து உதவவும். சம்மானம் வழங்கப்படும். (35952)

**தவறிவிட்டது**

101 – தொடர் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம். 2004 ஆம் ஆண்டுக்கான வரிப்பத்திரம் என்பன அடங்கிய பொலித்தீன் பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் - கீழ்க்காணும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (35944)(26)

மா. ஜெயசீலன்
ஸ்ரீ துர்க்கா இரும்பகம்
இல.186. பாங்ஷால் வீதி
சின்னக்கடை யாழ்ப்பாணம்.

ச. மோகனதாஸ்
தனுஜா கொமினிக்கேஷன்ஸ்
அராலி மந்தி.
வட்டுக்கோட்டை

31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் செல்லப்பா திருச்செல்வம்



மண்ணில்
14 * 07 * 1926

விண்ணில்
01 * 08 * 2004

தேற்றுவார் யாருமின்றி
தினம் தேம்பி அழுகின்றோம்
ஆற்ற வழி தேடி
தோற்றுத் துடிக்கின்றோம்
உம் இரக்க குணம்
இவ்வுலகில் யாருக்குமே இல்லை
இப்பெருமையை நாங்கள் அனைவரும்
பெருமையுடன் உங்களை
வணங்கி நிற்கின்றோம்
உங்களது பிரிவால் எமது உள்ளங்கள்
உறங்காமல் தவிக்கின்றன.

எமது குடும்பத்தலைவரின் 31ஆம் நினைவுநாளும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (31.08.2004) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது. எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதில் கலந்து அமரரின் ஆத்மா சாந்தி அடையப்பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்தில் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானசம்பந்தர் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு இன்று (31-08-2004) செவ்வாய்க்கிழமை.

இடம்: பிரதான மண்டபம், விவசாயபீடம்.

நேரம்: பி.ப 3.மணி.

இற்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படவுள்ளது. இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*- விவசாய பீட மாணவர் ஒன்றியம்.*

(சி-37355)(32-13-14)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொய்யாத்தோட்ட சனசமூகநிலைய உபதலைவரான *திரு.ப.வீ.யோசப்* அவர்களின் புதல்வன்

## செல்வன் வி.ஜெ.லூட்சன்

**(சம்பத்திரிசியார் கல்லூரி)**

யாழ்.மாவட்ட 16 வயதுக்குட்பட்ட மாணவரின் கிரிக்கெட் அணிக்குத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமைக்கு எமது மக்களின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அணி திறம்பட வெற்றிவாகை சூட வாழ்த்துகின்றோம்.

கொய்யாத்தோட்ட சனசமூக நிலைய சமூகத்தினர்.

(35968)(43-13-14)

# மரண அறிவித்தல்

## நடராசா முத்துராசா (ஆசாரியார்)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணை, பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முத்துராசா நேற்று (30.08.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா தம்பதிகளின் அன்பு மகனும் ஆறுமுகம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் கருணைநாயகியின் அன்புக் கணவரும் நிர்மலா, பிறேமிளா, குகதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற பூமணி, சரஸ்வதி (சிந்தாமணி), வடிவேலு (ராசு), ருக்குமணி, தாரண தேவி, காலஞ்சென்ற மகாலட்சுமி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சிவம்), இராஜேஸ்வரி (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆனந்தராசா (மைக்றோ ஒட்டோ வேக்ஸ்), காலஞ்சென்ற வில்வராசா (விஜயன்), சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ் சென்ற சீவரெட்ணம், காலஞ்சென்ற சேனாதிராசா, துரைராசா, கணேசலிங்கம், ஜெயராணி, சிவநாதன் (சிவம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தனுசா, கோபிகா, யானுகா, யனுஷன், நசாந், கபிதா, பிரசாந், சுகர்ணியா (சுவிஸ்), லாவணியா (சுவிஸ்), அஜித் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2004) புதன் கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திரகாளி கோவிலடி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(C/37356)(35-13-14-43)

தகவல்:-
ஆனந்தராசா
(மருமகன்)

# கொடிகாமம் மருத்துவமனையின் பிரசவவிடுதி இயங்காத நிலையில்

யாழ்ப்பாணம்,ஓக.31

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் திறந்துவைக்கப்பட்ட கொடிகாமம் மருத்துவ மனையின் பிரசவ விடுதி இயங்காத நிலையிலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுதத நடவடிக்கைகளினால் மூடப்பட்ட இவ் வைத்திய சாலையைச் சிலகாலம் இராணுவ வைத்திய சாலையாக இயக்கப்பட்டது.

அப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்த பின்னர் அவ்வைத்தியசாலை இராணுவ பாவனையில் இருந்து விடுவிக்கப்பட்டது.

அத்துடன், அங்கு பொதுமக்களின் வைத்திய சேவைக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

முதலில் மருத்துவமனை கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு வைத்திய சேவை நடைபெற்றுவந்தது.

அப்பகுதியில் கர்ப்பிணிகளின் தேவை கருதி அங்கு பிரசவ விடுதி மீண்டும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது. ஆயினும், இன்னும் அது இயங்காத நிலையிலேயே இருந்து வருகின்றது. அங்குபணிபுரிய நியமிக்கப்பட்ட மூன்று மருத்துவ தாதியர்களும் இன்னமும் பணியினைப் பொறுப்பெடுக்காது விடுமுறையில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. இதனால் இங்கு சிகிச்சைச்சகாக வரும் கர்ப்பிணிகள் வார்ட்டில் அனுமதிக்கப்படாத நிலையில் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

பளை, இத்தாவில், எழுதுமட்டுவாள், மிருசுவில், கொடிகாமம், கச்சாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களின் அவசர உடனடித் தேவைக்காக இயங்கி வரும் வைத்தியசாலை அப்பகுதியில் இது ஒன்றாகும்.

2000 ஆம் ஆண்டுக்கு முன் ஒரு மருத்துவ தாதியுடன் சிறப்பான முறையில் இயங்கிவந்த இந்தப்பிரசவ விடுதி தற்போது மூன்று மருத்துவ தாதியரை நியமனம் செய்தும் இயங்காத நிலையிலேயே இருந்துவருவது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில்,மேற்படி வைத்தியசாலைகு நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக வேறிடங்களுக்கு அனுப்ப வசதியாக அபிவிருத்திச்சங்கம் ஓர் அம்புலன்ஸ் வாகனத்தை வழங்குமாறு தலைமைப்பணிமனையிடம் கேட்டுவருவதாகவும் -

இதுவரைகாலமும் அதுவும் நிறைவு செய்யப்படாத நிலையிலேயே இருந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

(ஒ-15)

## பூசகர் தேவை

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழநி முருகன் கோயிலுக்கு (3நேரமும்) நித்திய பூசைகளைச் செய்வதற்கு பூசகர் தேவை. (குருக்கள் விரும்பத்தக்கது).

தொடர்பு: சிவா பிறதேர்ஸ்,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

(35963)

- பரிபாலனசபை


நிறைஞ்சனாஸ் சங்கானை



அர்ஜுன். மீனா நடித்த அன்பு சகோதரன்

தினசரி 11.00, 2.45, 6.00 (புநே)

வெள்ளி.சனி.ஞாயிறு. STRIKE FORCE (இரவு 8.45பு.நே)

(C/36305) (12)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த மதுர



பு:நே.:10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்

பிரசாந். மீனா. சரத்பாபு நடித்த ஷாக் திகில்காட்சிகள் நிறைந்த

காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00 (புநே)

02முதல் வசூல்ராஜா M.B.B.S



(C/36415) (12)


## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஓக.31

கோட்டை (ஜே81), வண்ணார்பண்ணை (ஜே/82), கொட்டடி (ஜே/83), ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு வாக்காளர் இடாப்பில் பெயர்களைச் சேர்த்தல், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தல் ஆகியவற்றுக்கான நடமாடும் சேவையொன்று இன்று செவ்வாயக்கிழமை காலை 9மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

(10)

## தேவை

* தொலைபேசி இயக்குநர்.
* கணனி இயக்குநர்.
* இலத்திரனியல் உதிரிப்பாக விற்பனையாளர்

5ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் இராசரத்தினம்

**(ஓய்வுபெற்ற சாரதி, சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)**



குப்பிழான் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராசரத்தினம் அவர்கள் 29.08.2004 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம்-சின்னம்மா தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற சின்னமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லப்பா -செல்லாச்சியின் மருமகனும் தங்கராசா, ரூபராணி, தவராசா (அமரர்), புஸ்பராணி (கனடா), இந்திராணி (கனடா), செல்வராணி (அமரர்), கனகசிங்கம் (கனடா), வனிதா (கனடா), சாந்தலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைராசா, தயாபரன் (கனடா), தவேந்திரன் (கனடா), கனிதா, தனுசா ஆகியோரின் மாமனாரும் சியாமளா, சிந்துஜா, சிவப்பிரியா, ஹர்சன், ஜவனா, ஜனனன், ஜசிந்தா, சாதனா, தர்சிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

*கேணியடி,*
*குப்பிழான் வடக்கு.*

(35969)(43-13-14)

தகவல்:
இ.துரைராசா.

திருமதி

## சறோஜினிதேவி வேலாயுதம் (கிளி)



அளவெட்டி மேற்கு, முருகபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி வேலாயுதம் (கிளி) அவர்கள் நேற்று (30.08.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-தவமணி தம்பதிகளின் அன்பு மகளும் வேலாயுதத்தின் அன்பு மனைவியும் பிரேமானந்தன், பிரேமநந்தினி, பிரேமசுகந்தி (ஜேர்மனி), பிரேமசுகந்தன், பிரேமசங்கர், பிரேமஜான்சி, பிரேமசுஜீவா, பிரேமதுசி ஆகியோரின் அன்புத் தாயாரும் கல்யாணி, தேவராசா, உதயகுமார் (ஜேர்மனி), தேவராசா, சகுந்தலாதேவி, தேவராசா ஆகியோரின் மாமியாரும் ஜெனிபன் (ஜேர்மனி), அபிராமி, அனுசியா, நிவேதிகன், ஜெசிந்தன் (ஜேர்மனி), ஜெனகன் (ஜேர்மனி), ஸ்ரீஜனனி, ஜெயப்பிரகாஸ், அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குணரட்ணம், இந்திராணி, காலஞ்சென்ற கண்ணுத்துரை, திருஞ்ஞானம், மல்லிகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் மனோகரன், செல்வமலர், நாகரஞ்சிதமலர், சுரேஸ்குமார், சுபாஜினி, ரஜனி, ஜெகஜெனனி, மனாதீபன், சிறிவரதன், வனஜராணி, சந்திரமோகன், காலஞ்சென்ற ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலசரஸ்வதி, ஞானகரன், சந்திரவதனி, கலைஞானன், கீதசுதன், கிருபாகரன், பிரதீபன், வரதரூபி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.08.2004) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொட்டுப்பனை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகபுரம்,*
*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.*

(35971)(43-13-14)

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## செல்வி ஞானமுத்து மங்களமரி லீலா (கிளி)



போயிட்டி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் 25,மூளாய் லேன், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஞானமுத்து மங்களமரி லீலா (கிளி) நேற்று (30.08.2004) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து அக்கினேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் அன்ரன் (கனடா), திருமதி அன்னமேரி யேசுதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யேசுதாசன் (இராசமணி, உரிமையாளர்-நிதுஷா பல்பொருள் அங்காடி), திருமதி ராணி அன்ரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிஷாந்தினி, நியுமன் (மாணவன்,புனித பத்திரிசியார் கல்லூரி), டினா, மேனகா, டயானா ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (31.08.2004) செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா கோயிலில் நடைபெற்று இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் அஞ்சலிக்காக இளவாலை போயிட்டியில் உள்ள அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு மாலை 3.00மணியளவில் நல்லடக்கத்திற்காக போயிட்டி இளவாலை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.25, மூளாய் லேன்,*
*சுண்டுக்குளி.*

(35948)(43-13-14)

தகவல்:
S.யேசுதாசன்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 05 * 03 * 1933



விண்ணில் 01 * 08 * 2004

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்த்து இன்று வானுறையும் தெய்வம்" ஆகிவிட்ட எமது குடும்பத்தலைவர்

## அமரர் சுப்பர் சுப்பிரமணியம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 31.08.2004 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் விருந்துபசாரத்திலும்கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

50/33 செட்டித்தெரு
நல்லூர்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நியாயத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

புலிகள் தரப்பில் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சகல மாவட்ட அரசியல் பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து சம்பந்தன் எம்.பி. நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சியில் வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த செவ்வியின் விவரம் வருமாறு:-

*கேள்வி:-* இன்று முக்கியமாக என்ன என்ன விடயங்கள் குறித்துப் பேசினீர்கள்?

*பதில்:-* பல விடயங்கள் குறித்துப் பேசினோம். தற்போதைய அரசியல்நிலை, இடைக்கால நிர்வாகசபையின் அவசியம் ஆகியன தொடர்பாக ஆராய்ந்தோம். இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க சகல தரப்புக்களுக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையிலும் விளக்கம் அளிக்கும் வகையிலும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடிவு செய்துள்ளோம். இதற்கான குழுக்களை அமைத்துள்ளோம். சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது என்று முடிவுசெய்தோம்.

சகல மாவட்டங்களிலும் சந்திப்புக்களை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தவும் போகின்றோம்.

*கேள்வி:-* பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஏதுவாகவும் தெற்கில் மேற்கொள்ளப்படும் தவறான பிரசாரத்தை முறியடிக்கவும் என்ன வகையான திட்டங்களை முன்னெடுக்கப் போகிறீர்கள்?

*பதில்:-* மீளப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் விளக்கமளிக்கவிரும்புகின்றோம். பேச்சு மீள ஆரம்பிக்கப்படவேண்டியதன் அவசியத்தை தென்பகுதி மக்களுக்கு எடுத்துக்கூற விரும்புகின்றோம். முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்கள் மத்தியிலும் பிரசாரம் செய்து ஆதரவு பெறவிருக்கின்றோம.

சர்வதேச சமூகத்துக்கு எமது நியாயபூர்வமான நிலைப்பாட்டை முன்வைக்க விருக்கின்றோம்.

சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க நாங்கள தயாராக இருக்கின்றோம். தென்னிலங்கைத் தலைமைகள்தான் பேச்சுக்கு எதிராக செயற்படுகின்றன என்ற செய்தியை சர்வதேச சமூகத்துக்கு விளக்கவிருக்கின்றோம்.

*கேள்வி:-* அண்டை நாடான இந்தியாவின் ஆதரவைப்பெற முனைவீர்களா?

*பதில்:-* இந்தியாவின் ஆதரவு எமக்கு முக்கியமானது; அவசியமானது. இந்தியாவின் ஒத்துழைப்பைப்பெற நாங்களும் ஆர்வமாக இருக்கின்றோம். விடுதலைப் புலிகளும் ஆர்வமாக இருக்கின்றார்கள்.

தமிழகத் தலைவர்களின் உதவியுடன் இந்திய அரசின் ஒத்துழைப்பைப் பெறுவது எனத் தீர்மானித்துள்ளோம். எப்படி நாங்கள் இந்த விடயத்தில் செயற்படப் போகின்றோம் என்பதை எதிர்காலத்தில் வெளியிடுவோம்.

*கேள்வி:-* இடைக்கால நிர்வாக சபை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடக்கும்போது கூட்டமைப்பு எம்.பிக்கள் எவ்வாறு செயற்படுவது என்பது இன்றைய சந்திப்பில் ஆராயப்பட்டதா?

*பதில்:-* ஆம் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விவாதத்தை பிற்போடும்படி கூட்டமைப்பு எம்.பிக்கள் கோரியிருந்தனர். ஆனால் அந்த விவாதம் மூலம் தமிழர் தரப்பு நியாயப்பாட்டை வெளிக்காட்ட நாங்கள் இப்போது தயாராக இருக்கின்றோம். ஆனால் விவாதத்துக்கு முன்னறிவித்தல் கொடுத்தவர்கள் இப்போது பின்னடிக்கிறார்கள்.

விவாதம் நடக்கும் பட்சத்தில் எமது நிலைப்பாட்டை சகலரையும் சர்வதேச சமூகத்தையும் ஈர்க்கும் வகையில் செயற்பட்டு வெளிப்படுத்துவோம்.

*கேள்வி:-* இடைநிறுத்தப்பட்ட பேச்சுக்களை மீள ஆரம்பிக்க என்ன செய்யப்போகின்றீர்கள்?

*பதில்:-* கடந்த ஜூலை மாதம் 10 ஆம் திகதி ஜனாதிபதியை நாங்கள் சந்தித்தோம். அச்சமயம் இடைக்கால நிர்வாகம் குறித்து முதலில் பேச்சு நடத்த அவர் இணங்கியிருந்தா. ஆனால் பின்வந்த நாள்களில் தனது வாக்குறுதியை மீறி வேறுவிதமாக அவர் பேசி வருகின்றார்.

சமாதானம் ஏற்படவேண்டுமானால் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். பேச்சுக்கள் முதலில் இடைக்கால நிர்வாக்சபை குறித்து இடம்பெறவேண்டும். இதுவே தமிழர் தரப்பு நிலைப்பாடு என்பதை சகலருக்கும், சர்வதேசத்துக்கும் எடுத்துரைப்போம் - என்றார்.

## கனடா வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணம்செய்த வாகனம், வீதியை விட்டு விலகி மற்றுமோர் வாகனத்துடன் மோதியுள்ளது. இதன் காரணமாக இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் அறியவந்துள்ளது.

பலியான இளைஞர்களில் ஒருவரின் தகப்பனார், இந்த அனர்த்தம் குறித்து அறிந்தவுடன் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ)

## ஈ.பி.டி.பி. ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கப்பட்டது.

செங்கலடியைச் சேர்ந்த சங்கர் (வயது-19) என்பவரே கடத்திச் செல்லப்பட்டவராவார். செங்கலடிப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம், விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த கிரான் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் அவர்களின் பிடியிலிருந்து தப்பி வந்திருக்கிறார் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (க)

# தமிழரின் நியாயத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*கேள்வி:* இன்றைய பேச்சுக்களில் என்ன விடயங்கள் ஆராயப்பட்டன?

*பதில்:* இடைக்கால நிர்வாகசபை, இடைநிறுத்தப்பட்ட பேச்சுக்கள் ஆகியன குறித்துக் கலந்துரையாடினோம்.

தமிழர் தரப்பின் நியாயப்பாட்டை நாடாளுமன்றம் மூலம் சகல தரப்புக்களுக்கும் தெரியப்படுத்த குழுவொன்று நியமிக்கப்பட்டது.

எமது தாயகப் பிரதேசத்தில் தமிழ்த் தேசியம், தமிழர் தரப்பின் தலைமை ஆகியன குறித்து மக்களுக்கு விளக்க ஒரு குழு அமைக்கப்பட்டது.

தென்னிலங்கைத் தலைவர்களுக்கு எமது நிலைப்பாட்டை விளக்க மற்றொரு குழு அமைக்கப்பட்டது.

சர்வதேச சமூகத்துக்குத் தமிழர் தரப்பு நியாயப்பாட்டை விளக்க இராஜதந்திரக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து இக்குழுக்களை இன்று அமைத்துள்ளனர்.

*கேள்வி:* நாடாளுமன்ற உறுப்பினர்களை மாற்றி புதியவர்களுக்கு இடமளிப்பது குறித்து ஏதாவது பேசப்பட்டதா?

பதில்: தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த ஒன்று சேர்ந்து செயற்படுவதாக சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் உறுதி கூறியுள்ளனர். வேலைத் திட்டங்களை சகலரும் இணைந்து முன்னெடுப்பது என்றும் தீர்மானித்துள்ளனர்.

வெளியிலுள்ள - இனப்பற்று, தேசப்பற்று உள்ள - கல்விமான்களும் இந்தப் பணிக்கு ஆதரவு தர முன்வந்துள்ளார்கள். அவர்களையும் இணைத்து தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த எம்.பிக்கள் முடிவு செய்துள்ளனர்.

தமிழ்த் தேசியத்துக்கு எதிராகக் கிளப்பப்படும் பிரசாரங்களையும் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பரப்புரைகளையும் முறியடிக்க அவர்கள் முன்வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளாகிய நாமும் அவர்களுடன் இணைந்து எமது நியாயப்பாட்டை சர்வதேச சமூகத்தக்கும் மற்றும் சகல தரப்புகளுக்கும் விளக்கும் நடவடிக்கையைத் தீவிரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

*கேள்வி:* பேச்சு ஆரம்பிப்பதற்கான அடுத்த கட்ட நகர்வு குறித்து....?

*பதில்:* தமிழ் மக்கள் கடந்த இரண்டரை வருடங்கள் பொறுத்துவிட்டார்கள். சலிப்படைந்து, சமாதானத்தின் மீது நம்பிக்கை இழக்கும் நிலைக்கு அவர்கள் வந்துவிட்டனர்.

இன்றைய சூழ்நிலையில் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே சகலரதும் விருப்பமாகும். தெற்கு அரசியல்வாதிகளும் அரசும் பேச்சை அரம்பித்து சரியான நிலைப்பாட்டை எடுக்காது விட்டால் சமாதான முயற்சிகள் நெருக்கடிநிலையை நோக்கிச் செல்லும். பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுதான் விடுதலைப் புலிகளினதும் சகலரதும் விருப்பமாகும்.

*கேள்வி:-* கிழக்கில் தொடரும் கொலைகள் மற்றும் வடக்கில் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்பட்டமை போன்றவை பேச்சு ஆரம்பிப்பதைத் தாமதமாக்குமா?

*பதில்:-* ஆம் மட்டக்களப்பில் நடக்கும் கொலைகள் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

அரசும் படைத்தரப்பும் ஆயதக்குழுக்களின் ஆயுதங்களைக் களையாமல் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணாகச் செயற்படுவது தான் கொலைகள் தொடர்வதற்குக் காரணம். புரிந்துணர்வு உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரத்துக்களை சரியான முறையில் நடமுறைப்படுத்தினால் இந் நிலை ஏற்பட்டிருக்காது.

ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர அரசும் படைத்தரப்பும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காமல் சமாதான முயற்சிகளைச் சீராக முன்னெடுத்துச் செல்ல முடியாது எனக் கருதுகிறேன்.

வலி.வடக்கு உட்பட இடம்பெயர்ந்த பிரதேச மக்களின் வாழ்வு சீராக, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விரக்தி நிலையில் உள்ள அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண்பதற்கான செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தவேண்டும் - என்றார் தமிழ்ச்செல்வன். (க-3)

## கண்காணிப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிப் போராளிகள் பலர் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களை அடுத்து படைத் தரப்புடனான சந்திப்புக்களை விடுதலைப் புலிகள் இடை நிறுத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பை மீண்டும் ஏற்படுத்தி இரு தரப்புகளுக்கும் இடையில் புரிந்துணர்வை வளர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவர் இருதரப்பினருடன் ஆராயவிருக்கின்றார் எனத் தெரியவந்தது.

இதற்கிடையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்துடன் கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று கலந்துரையாடியுள்ளார். (ஒ-க)

## படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதும் தெரியாது என இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் நம்பிக்கொண்டிருக்க, அவர்கள் ஒவ்வொருவராக வீழ்த்தப்பட்டு வருவது இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றதாம்.

இந்த வரிசையில் கடந்த சனியன்று அதிகாலை கொழும்பு, களுபோவில, பிப்பிலியான வீதியில் பொரலஸ்கமவில் சுட்டுக்கொல்லப்பட்ட திஸ்ஸவீரசிங்கம் துஷ்யந்தகுமார் முக்கிய உளவாளியாகக் கருதப்படுகின்றார்.

யுத்தகாலத்தில் மட்டக்களப்பு மாவட்டதத்துக்குள் ஊடுருவி புலிகளின் கிழக்கு மாகாண உளவுத்துறைப் பொறுப்பாளர் நிஸாம், தொலைத்தொடர்புப் பொறுப்பாளர் மனோ ஆகியோரைத் தூக்கிப் படுகொலை செய்த சூத்திரதாரி இவரே என்று கூறப்படுகின்றது.

இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு உளவு சொல்பவராக மட்டுமல்லாது, அதன் தாக்குதல் கையாளாகவும் செயற்பட்டு வந்தார் என்பது வெளியே யாருக்கும் அறவே தெரியாது என்றே இராணுவப் புலனாய்வுத் தரப்பு நம்பி வந்ததாம்.

தாக்குதல் நபர்களுக்கு இவர் உளவாளி என்பதும் புலனாய்வுப் பிரிவின் முக்கிய ஆள் என்பதும் எப்படித் தெரியவந்தது என்பது புரியாமல் இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஆச்சரியத்திலும், அதிர்ச்சியிலும் மூழ்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தொடர் தாக்குதல்கள் மற்றும் படுகொலைகள் ஏற்படுத்திவரும்அதிர்ச்சி காரணமாக, எஞ்சியிருக்கும் ஓரிரு இராணுவ உளவாளிகளான தமிழர்களும் நாட்டை விட்டுத் தப்பியோடி ஒதுங்குவதற்கு முயன்று வருகின்றனர்.

தொடர் கொலைகளாலும், இப்படி ஆள்கள் ஒதுங்குவதாலும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகள் ஒடுங்கும் நிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பண ஆசையால் உளவுப் பணிக்கு வந்தோர் இப்போது கொலை அச்சத்தால் ஓடித்தப்ப முயல்வது இராணுவத்துக்கு - குறிப்பாக அதன் புலனாய்வுப் பிரிவுக்கு - பெரும் பின்னடைவை ஏற்படுத்தி வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

- இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட உளவாளிகளின் குடும்பத்தவருக்கு அல்லது மனைவி, பிள்ளைகளுக்குத் தகுந்த நஷ்டஈட்டையோ, கவனிப்பையோ அரசுத்தரப்பு வழங்காததும் எஞ்சியிருக்கும் ஒரு சில உளவாளிகளை விசனத்தில் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

உளவு, துப்புத் தருவோரைப் பாதுகாப்பதற்த என்ன செய்யலாம் என்பது குறித்து இராணுவப் பிரிவு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது என்றும் தெரிகின்றது.

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து பொன்னையா

சாவகச்சேரி வடக்கு, மருதடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவரான சரவணமுத்து பொன்னையா நேற்று (30-08-2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் பூபாலசிங்கம் (சுவிஸ்), இந்திராதேவி, ஜெயபாலசிங்கம் (லண்டன்), தர்மலட்சுமி, சிவசுதன் (மீசாலை வீரசிங்க மகாவித்தியாலய ஆசிரியர்), சிவகுமார் (லண்டன்), சுபோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசோதி (சுவிஸ்), பாலகுமாரன், புஷ்பா (லண்டன்), மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பபீதன் (சுவிஸ்), கிருஷாந் (சுவிஸ்), சைனுகா (சுவிஸ்), ஹரிசன் (லண்டன்), பபிஸிகா (லண்டன்), தனுசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-08-2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.*
*தொ.பே.இல, 0776141744*

(சி-37357) தகவல்: சிவசுதன் (மகன்)
(32-13-14) பாலகுமாரன் (மருமகன்)


CHEMISTRY CENTRE
Temple Road (Greenpark முன்னே)
A/L 2005 CHEMISTRY
முக்கிய அலகுகள் யாவும் மாலை நேரங்களில் கற்பிக்கும் விசேட பிரிவு
ஆரம்பம்: 31-08-04 இன்று 6p.m
A/L 2006 "வெப்ப இரசாயனம்"
ஆரம்பம்: 01-09-04 4.30-5.30 p.m
By:-அன்பழகன் B.Sc. (சி-37339)

D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS
பொருளியல் வரதராஜன்
கணக்கீடு பாலவாசன்
வணிகக் கல்வி உமாகாந்த்
ஆரம்பம்: 01.09.2004 புதன் 7 மணி (ப.நே.)
இயக்குநர், S.வரதராஜன். (35771)

புதிய பிரிவுகள் ஆரம்பம் 01-09-2004
Diploma in Hardware Engineering ஒரு மாதம்
உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சிநெறி. எவரும் கற்கலாம். கணினி பற்றிய முன்னறிவு தேவையில்லை. ரஷ்ய தொழில்நுட்பம். தமிழிலேயே விரிவுரைகள்.
★ ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
★ ஒவ்வொரு மாணவனுக்கு ஒரு புதிய கணினி வழங்கப்படும்.
★ பயிற்சி முடிவில் அக்கணினியை Assembling செய்து Software Instalation செய்யவேண்டும்.
1st Day 1.Introduction of a computer 2.Disassembling of the computer
2nd Day Casing and Power Supply
3rd Day Mother Board
4th Day RAM,ROM Speed, band width, system bus
5th Day Hard drive, Floppy drive, Floppy disk, CD-ROM
6th Day Processor
7th Day VGA card, Sound card, Network card, modem
8th Day Keyboard, mouse, speaker
9th Day Cables & Connectors
10th Day Assembling casing, Powerunit, Motherboard, Processor
11th Day I/O card, Memory, Hard drive, Floppy drive, CD drive
12th Day BIOS setting
13th Day Booting, DOS
14th Day Partition
15th Day Operating system installation
16th Day Configuration Of VGA cards, Sound cards & Modems
17th Day About monitor & Printer
18th DAY Trouble shooting
19th Day Safety Maintenance
20th Day Software, Virus, Networking
Graduateship in Hardware Engineering ஒருவருடம்
இக்கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு Institute of British Engineers ஆல் CERTIFICATE வழங்கப்படும். இவர்களில் உயர்கல்வியைத் தொடர விரும்புகிறவர்களுக்கு சென்று படிப்பதற்கான VISA வழங்கப்படும்.
Head Office: NORTH LANKA
(35883)(17-18-32) பிரதான வீதி, சங்கானை.
Branch: கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி.

D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
கல்வியாண்டு 2003/2004
1st in Com./G.A.Q
மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விரிவுரைகள் ஆரம்பம்:04-09-04
சனி 8.00 மணி (ப.நே)
இயக்குநர் S.வரதராஜன். (35771)

யாழ். மண்ணில் கலை, வர்த்தக வகுப்புகளுக்கு அன்றும்தான் இன்றும்தான் இனி... என்றுமேதான்.
சிகரம் போல விளங்குவது
பிரிவு 2
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ். A/L DAY CLASS
ACC. திரு.பாலவாசன் பிரிவு I 8.00-10.00 பிரிவு II 12.30-01.30
ECO. திரு.உதயன் பிரிவு I mon., wed., fri. 7.15 பிரிவு II sat., sun., 2.30
B.ST. திரு.யசோ பிரிவு I 10.00-11.00 பிரிவு II 12.30-01.30
LOG. திரு.சயந்தன் Tue., Thu. 7.00
TAM. திரு.குழந்தை பிரிவு I 08.00-09.00 பிரிவு II 09.30-10.30
H/C. திரு.பத்மராஜா 7.00-8.00
GEO. திரு.பாபு பிரிவு I 09.00-10.30 பிரிவு II 10.30-11.30
HIN. திரு.N.T.தரன் 11.00-12.00
HIST. திரு.சுதன் 11.00-12.00
P/SC. திரு.றொபின்சன் 10.00-11.00
CHRI. திரு.வசந்தன் 07.00-08.00
DRAMA திரு.மதி 12.00-1.00
(C-37336)
பிரிவு 3 வெகு விரைவில்.... ஆரம்பம்: 01.09.04 wed. 7.00


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org